விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka


# வலம்புரி
# VALAMPURI


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி26 செவ்வாய்க்கிழமை (12.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 328

## நட்டஈடு அல்லது ஓய்வூதியத்துடன்

# அரசு ஊழியர்களைக் குறைக்க

# விரைவில் சுற்று நிருபம் வெளிவரும்!

## 45நாள் லீவிலும் மாற்றம் வரும்

(நமது நிருபர்)

**தற்போது அரச சேவையில் இருக்கும் உழியர்களில் ஒரு பகுதியினருக்கு நட்டஈடு வழங்கி வேலையிலிருந்து இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கான சுற்று நிருபம் ஒன்றைத் தயாரிப்பதில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.**

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்படுவதாக இருந்தால் அவர்களுக்குரிய 45 நாட்கள் வருடாந்த விடுமுறையை குறைக்குமாறும் அரச ஊழியர்களில் 30 சதவீதமானவர்களை வேலையிலிருந்து குறைக்குமாறும் திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தது.

திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்கவே அரசாங்கம் இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை இரண்டு வழிகள் மூலம் மேற்கொள்வதற்கு சுற்று நிருபம் ஒன்றை தாயாரித்து வருகிறது.

இச் சுற்று சிருபத்தின் மூலம்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

## தாய்வான் மருத்துவக் குழு நேற்று கண் சிகிச்சையை ஆரம்பித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ.ரி.சூயு தலைமையிலான கண் சத்திர சிகிச்சை நிபுணர் குழுவினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை முகாமை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை10 மணியளவில் யாழ்ப்பாணம் வருகை தந்த இக்குழுவினருக்கு யாழ்.றோட்டறிக் கழகம் வரவேற்பளித்துக் கௌரவித்தது. தொடர்ந்து குழுவினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் 11.30 மணியளவில் சிகிச்சை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இச்சிகிச்சை முகாமில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி கையளித்த 9.மி.மீ துப்பாக்கிகளை புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்குக!

### இராணுவத் தளபதிக்கு நீதிபதி விக்கினராஜா உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைக்குப் பயன் படுத்தப்பட்ட 9மி.மீ ரகத் துப்பாக்கியைக் கண்டுபிடிப்பதற்கு அரசு இரசாயனப் பகுப்பாய்வாளரின் உதவிகளையும், இராணுவத் தளபதியின் உதவிகளையும் நாடுமாறு கொலை வழக்கை விசாரணை செய்யும் புலனாய்வுப் பொலிஸாருக்கு நேற்று யாழ். மாவட்ட நிதிபதி இ.த.விக்கினராஜா உத்தரவிட்டுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஈ.பி.டி.பியினால் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட ஆயுதங்களில் 9மி.மீ கைத்துப்பாக்கிகள் அனைத்தையும் புலாணய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

நிமலராஜன் கொலைக்கு இந்த வகை துப்பாக்கிக் குண்டுகள் 9மி.மீ துப்பாக்கி ஒன்றிலிருந்து பயன்படுத்தப்பட்டதா என்பதை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தமிழீழக் காவல்துறை அமைச்சர் ஹக்கீம் அதிருப்தி

### பிரதமருக்கும் - பிரபாவுக்கும் கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களை அமைத்து வருவது தொடர்பாகவும் நீதி நிர்வாக சேவைகளை அங்கு விஸ்தரிப்பது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டு வருவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் பிரதேசங்களில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் விதம் குறித்து தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆராய வேண்டிய சூழ்நிலை [illegible]ட்டுள்ளது. இது விடயம் தொடர்[illegible] பிரதமருக்கு

(10ம் பக்கம் [illegible]ர்க்க)

## முஸ்லிம் மக்களின் உரிமைகளை

## நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து

அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிர

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்க உயர் மட்டக் குழு நியமனம்

## உள்துறை அமைச்சர் நியமித்தார்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் நல உரிமைகள மற்றும் பாதுகாப்புச் சம்பந்தமாகக் கவனிப்பதற்கு மூன்று உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று நியமித்துள்ளார்.

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள 9 பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அளித்த வாக்குறுதியை அடுத்தே இந்த உயர் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு மாதம் ஒருமுறை அறிக்கை சமர்ப்பிக்கும்.

இக் குழுவானது சட்ட அமுலாக்கம், அப்பகுதியில் உள்ள சகல சமூகங்களுக்குமிடையே சுமூகமான உறவுகளை ஏற்படுத்தல், அப் பகுதியில் முஸ்லிம் மக்களின்பிரதான நலன்களைப் பாதுகாத்தல் என்பவற்றை உறுதி செய்யும் ஒரு அமைப்பாக இருக்குமென உளதுறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் செயலாளர்

(10ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து

# கிளி - மன்னார் - அம்பாறையில் இன்று மாபெரும் பேரணி

(நமது நிருபர்)


தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய 200 வருட சிறைத் தண்டனையை ஆட்சேபித்து இன்று கிளிநொச்சி, மன்னார், அம்பாறை மாவட்டங்களில் மாபெரும் கண்டனப் பேரணிகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சியில். இன்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகும் மாபெரும் கண்டனப் பேரணி கிளிநொச்சி செயலகத்தில் முடிவடையவுள்ளது.

பேரணியின் முடிவில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் அரச அதிபரிடம் கையளிக்கப் படவுள்ளன.

இதேபோல் மன்னாரிலும், அம்பாறை

(10ம் பக்கம் பார்க்க)



யாழ் போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை மேற்கொள்ள வந்திருந்த தாய்வான் மருத்துவக் குழுவினரை முதலாவது படத்திலும், தாய்வான் மருத்துவ் நிபுணர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்

படங்கள்:- கை.ஜெயகாந்தன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐ. நா. தீர்மானத்துக்கு ஈராக் கட்டுப்படவேண்டும்

# அரபுநாட்டு வெளிஉறவு அமைச்சர்கள்வலியுறுத்து

(ஜெய்ரோ)

ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட ஈராக் தொடர்பான புதிய தீர்மானத்திற்கு ஈராக் கட்டுப்படவேண்டும் என்று கெய்ரோவில் நேற்றுமுன்தினம் இடப்பெற்ற கூட்டத்தில் அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

22அரபு நாடுகள் அங்கம் வகிக்கும் இக்கூட்டத்தில் ஈராக் தொடர்பாக தற்பொழுதுஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமை குறித்து விவாதம் செய்யவும் அரபு நாடுகளின் ஒற்றுமையை நிலைநாட்டவும் இந்தக்கூட்டம் இடம்பெற்றதாக அரபு நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஈராக்கின் வெளியுறவு அமைச்சரோடு கலந்துரையாடிய சவூதியரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் ஐக்கியநாடுகள் சபையின் தீர்மானத்தை ஈராக் ஏற்றுக்கொள்ளும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்

ஐக்கிய நாடுகள்சபையின் தீர்மானம் கெட்டநோக்கம் கொண்டது என்று ஈராக் ஏற்கனவே அறிவித்திருந்தாலும் அத் தீர்மானத்தைப் பரிசீலிக்கப் போவதாக அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈராக்குறித்து ஐக்கியநாடுகள்சபையின் தீர்மானத்திற்கு அரபுக் கூட்டமைப்பிலிருக்கின்றசிரியாவும் ஆதரவாக வாக்களித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது (பி-4)

உலக தரிசனம்

## தீவிரவாதிகள் மீது முற்றுகை

தீவிரவாதப் போக்குடைய இஸ்லாமியர்களை முற்றுகையிடும் வகையில் அரசபடையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஜோர்டானில் 3பேர் கொல்லப்பட்டதுடன் பலபேர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கொலைசெய்யப்பட்ட அமெரிக்க இராஜதந்திரியை கொலை செய்த முஸ்லிம் நபரை தேடுவதற்காகவே இந்த முற்றுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

## ஐவரிக்கோஸ்ட் அமைதிக்கு டோகோஜனாதிபதி முயற்சி

(லோம்)

ஐவரிக் கோஸ்டில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் டோகோ நாட்டின் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள ஐவரிக்கோஸ்ட் அரசபடையினரும், கிளர்ச்சியாளர்களும் கடந்த இருவாரங்களாக டோகோவின் தலைநகரில் சுமுகமான முறையில் பேச்சுக்களை நடத்தி வந்தார்கள்.

எனினும் அண்மையில் கிளர்ச்சி தலைவர் ஒருவரின் சகோதரனை அரசபடையினர் சுட்டுக்கொன்றதையடுத்து பாதுகாப்பின்மை காரணமாக கிளர்ச்சியாளர் பேச்சுக்களை இடைநிறுத்தியுள்ளமை இங்குகுறிப்பிடத்தக்கது. (பி-4)

# உலகப்போரின்போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளால் எகிப்தில் மக்களுக்கு இன்றும் துன்பம்

(கெய்ரோ)

2ம் உலகப்போரின் போது புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகளால் எகிப்திய மக்கள் தற்பொழுதும் கூடசொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி எகிப்தியநிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

2ஆம் உலகப் போரின் முழக்கம் ஓய்ந்து 5தசாப்தங்களுக்கு மேல் கடந்துவிட்ட போதிலும் அக்காலப்பகுதியில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகள் மற்றும் கைவிடப்பட்ட புதையுண்டு போயுள்ள குண்டுகளினால் எமதுமக்கள் இன்றும் துன்பங்களைச் சுமந்த வண்ணமுள்ளார்கள் என்றுகூறியுள்ளனர்.

கடந்த 20வருடங்களில் நிலக்கண்ணி வெடிகளில் சிக்கி 3ஆயிரம் மக்கள் பலியானதுடன் 6ஆயிரம்பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும்-

2ம்உலகப்போரில் எகிப்து நேரடியாக ஈடுபடாவிட்டாலும் தனது நிலைகளையும் சகாரா பாலைவனத்தையும் வெளிநாட்டு இராணுவத்தினர் பயன்படுத்த வழங்கி இருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாலைவனத்தில் கட்டும் 180லட்சம் நிலக்கண்ணிவெடிகள், மற்றும் வெடிக்காத குண்டுகள் இருப்பதாகவும் இதனால் எகிப்து மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்- (பி-4)

## ஸ்லோவேனிய ஜனாதிபதி பதவி

# 2-ம் கட்டவாக்கெடுப்பு டிசம்பரில் நடக்கும்

ஸ்லோவேனியா ஜனாதிபதி தேர்தலில்போட்டியிட்ட பிரதமர் 2ம் கட்ட வாக்கெடுப்பினை எதிர்நோக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்லோவேனியாவில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 44.4 வீத வாக்குகளை பெற்று ஸ்லோவேனியாப் பிரதமர் முன்னணியில் இருந்த போதும் அறுதிப் பெரும்பான்மையை இவர் பெற்றுக்கொள்ளாதகாரணத்தினால் 2ம் கட்ட வாக்கெடுப்பிற்கு தள்ளப்பட்டுள்ளார்.

மேலும் 2ம் கட்ட வாக்கெடுப்பானது எதிர்வரும் டிசம்பர் மாதம் 1ம் திகதி நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

## இந்தியா- ஈரான்

# தொழில்நுட்ப வளர்ச்சிக்கு கூட்டு ஒப்பந்தம்

(தெஹ்ரான்)

அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறையின் வளர்ச்சிக்கான கூட்டு ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஈரானும் கையெழுத்திட்டுள்ளன.

இந்தியமனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் முரளி மனோகர் ஜோசியும் ஈரான் நாட்டுஅறிவியல்துறை அமைச்சர்டாக்டர்முஸ்தப்பா முகினும் இவ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

மேலும் இவ் ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கான கூட்டம் விரைவில் நடைபெறுமென கையெழுத்திட்ட இருதரப்பினரும் தெரிவித்துள்ளனர் என்று ஈரான் செய்தியாளர் தெரிவித்துள்ளனர். (பி- 2)

# றம்ழான் மாதத்தை யொட்டி 20 பெண் கைதிகளை விடுவித்தார்

## ஆப். அதிபர் அமீர் ஹர்ஸாய்

(காபூல்)

காபூல் சிறையிலிருந்து 20 பெண் கைதிகளை றம்ழான் மாதத்தையொட்டி அதிபர் அமீர் கர்ஸாய் விடுதலை செய்துள்ளார்.

கட்டாய திருமணத்திற்கு இணங்க மறுத்தமை கணவருக்கு கீழ்ப்படிய மறுத்தமை போன்ற குற்றங்களிற்காக தண்டனையை அனுபவித்த பெண்களே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் வேறு பல குற்றச் செயல்கள் புரிந்தவர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஆராய்வதற்கு மாகாணச் சிறைச்சாலைகளிற்கு பிரதிநிதிகள் குழுஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதாக அதிபர் அமீர் கர்ஸாய் தெரிவித்துள்ளார் (டி-02)

# தமிழகத்தில் பெருமழை சென்னை வெள்ளக்காடாக காட்சி தருகிறது

(சென்னை)

சென்னையிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் பெய்துவரும் அடைமழையினால் அப்பகுதிகள் பெரும் வெள்ளக்காடாக காட்சியளிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இம் மழையினால் தூத்துக்குடி வேதாரணியம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டஉப்பு உற்பத்தி தடைப்பட்டுள்ளதோடு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

அத்துடன் சிவகாசி சாத்தூர் கோவைப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது (பி.02)

## ஈராக் பொருளாதாரத்தடை

# பாதிப்புகளை நிவர்த்திக்க 5 நாடுகளுடன் ஒப்பந்தம்

பன்னிரண்டு வருடங்களாகத் தொடர்ந்து அமுலிலிருந்த பொருளாதாரத்தடை காரணமாக எதிர்நோக்கிவந்தபாதிப்புக்களை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் 5நாடுகளுடன் 500மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தங்களில் ஈராக் கைச்சாத்திட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் எண்ணெய்க்குப் பதிலாக உணவுத் திட்டத்தின் கீழ் இருபதிற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் சவுதிஅரேபியா, ஈரான், ஐக்கியஇராச்சியம், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் தமது நாடு கைச்சாத்திட்டுள்ளதாக ஈராக்கின்வர்த்தக அமைச்சர் முகமட்மெல்விசலேப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தைக் கூட்டும் வகையில் இலங்கை, ஏமன் நாடுகளுடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் ஈராக் கைச்சாத்திட்டுள்ளது. (பி- 4)

# சமாதானப் பேச்சுவார்த்தை நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது

## ஆஸியில் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

படிப்படியாக நடந்துவரும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்றம் அடைந்துவருகிறது என்று அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அவுஸ்திரேலிய சிற்றிநகரில் மேற்வாரி பல்கலைக்சழகத்தில் உரையாற்றிய போதே பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு பரிமாற்றங்களும் கலந்தாலோசனைகளும் நடைபெற்று வருகின்றன.

கடந்த கால பேச்சுவார்த்தைகளில் இடம் பெற்ற குறைபாடுகளைக் களைய தற்போதுள்ள அரசு முயன்று வருவதாகவும் கூறியுள்ளார்.

ஒஸ்லோ நகரில் இடம் பெறவுள்ள உதவி வழங்கும் கூட்டத்தில் அவுஸ்ரேலியாவின் பங்குபற்றி ஆராய்வதற்காக அண்மையில் அமைச்சர் பீரிஸ் அவுஸ்ரேலியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## குஜராத் சட்டசபை தேர்தல்

# ஆணையாளர் குழு நேரில் பரிசீலனை

(புதுடில்லி)

குஜராத் சட்டப்பேரவை தேர்தல் ஏற்பாடுகளை மதிப்பிடுசெய்வதற்காக நேற்றுத் தேர்தல் ஆணையாளர் மூன்றுபேர் அகமதாபாத் சென்றுள்ளனர்.

நேற்று அகமதாபாத் சென்ற தேர்தல் தலைமை ஆணையாளர் ஜே.எம்.லிங்டோ.மற்றும் ரி.எஸ் கிருஸ்ணமூர்த்தி பி.பி சான்ரன் ஆகியமூன்று தேர்தல் ஆணையாளர்களும் அகமதாபாத் மாவட்ட ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து தேர்தல் ஆயத்த நிலைகள் பற்றி மதிப்பீடு செய்யவுள்ளனர் என்றும் முதற்கடவையாக சுமார் 50 ஆயிரம் மின் அணுவாக்குப் பதிவு இயந்திரங்களை குஜராத் சட்டப் பேரவை தேர்தலிற்கு பயன்படுத்தப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-02)

## நிலவுடமை முதலாளித்துவத்தை விடுத்து, சோஷலிஸத்தை எட்டுவதே எமது மக்களுக்கு பூரண விடுதலையைக் கொண்டுவரும் வழிமுறை

### புதிய ஜனநாயக கட்சியின் தேசிய மாநாட்டில் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணப்படுவதற்கான மிகவும் தீர்க்கமானதும் முக்கியமானதுமான கால கட்டத்தில் இருக்கிறோம். இந்நிலையில் தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம், பேச்சு வார்த்தையின் மறைவில் இருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் தாரைவார்க்கப்படுவதையோ பேச்சுவார்த்தையை குழப்ப முயற்சிக்கும் இந்திய மேலாதிக்கத்திடம் அடங்கிப் போவதையோ புதிய- ஜனநாயக கட்சி ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

தமிழ் மக்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இன்றைய சமாதான பேச்சுவார்த்தைகளினூடாக அடக்கப்படுகிற தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களின் பூரணமான சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, சமத்துவம் என்பவற்றை நிலைநாட்டும் திசையில் முன்னேறுவது அவசியமாகும். பேச்சுவார்த்தையை மிகவும் நிதானமாகவும், தூர நோக்குடனும், நுட்பமாகவும் பயன்படுத்தி கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் 4 வது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய- ஜனநாயக கட்சியின் 4 வது தேசிய மாநாடு கடந்த 8, 9 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள ''சிற்றி ஹோல்'' மண்டபத்தில் நடைபெற்றது.

நாட்டின் வடக்கு- கிழக்கு, மலையகம், கொழும்பு உட்பட பல பிரதேசங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தோழர்கள் சி.கா. செந்திவேல், இ.தம்பையா, கே.தணிகாசலம், இ.கா. சூடாமணி, எஸ் பன்னீர் செல்வம் ஆகியோரை தலைமையாகக் கொண்டு நடைபெற்ற மேற்படி மாநாட்டில் மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன,

● இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி எமது கட்சி வெகுஜனப் போராட்டங்களை தொடர்ந்து நடாத்தி வருகின்றது அவ்வகையில் இன்றைய பேச்சுவார்த்தைசூழ்நிலையை மிகவும் தீர்க்கமானதாகவும், முக்கியமானதாகவும் கொள்கிறது.

அதே வேளை, பேச்சுவார்த்தையின் மறைவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது பேச்சுவார்த்தையை குழப்பி இந்தியா இலங்கையின் மீது அதன் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதில் முனைப்பாக இருந்து வருகின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சீரழிப்பதற்கு அமெரிக்காவிற்கு பலியாவதையோ இடம் விட்டுக் கொடுப்பதையோ ஏற்றுக் கொள்ள முடியாது ஏற்கனவே இந்திய மேலாதிக்கத்தின் நோக்கங்களால் தமிழ் மக்களின் போராட்டம் சீரழிக்கப்பட்டு பின்னடைவுகளை சந்தித்தது போன்று மீண்டும் இந்திய மேலாதிக்கத்திற்கு சந்தர்ப்பத்தை கொடுத்து போராட்டத்தை சீரழிக்க இடம் கொடுக்கக் கூடாது.

● இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை இன்னும் பிரதான முரண்பாடாகவே இருந்து வருகிறது என்பது இன்றும் யதார்த்தமாகவே இருந்து வருகின்றது. யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதாலும் சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாலும் தேசிய இனப் பிரச்சினையே பிரதான முரண்பாடாக இருந்து வருகின்றது. என்பதில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விட்டதாக கொள்ளக் கூடாது.

எமது கட்சி தொடர்ந்து கூறி வருவது போன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் பிரச்சினைகளாகும் என்பதை மீண்டும் வலியுறுத்துவதுடன் பேச்சுவார்த்தையின் மூலம் தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும். மலையகத் தமிழ் மக்களினதும் சுயாட்சி, சமத்துவம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

● பேச்சுவார்த்தை சூழ்நிலையை பயன்படுத்தி அமெரிக்கா தென்னாசிய பிராந்தியத்தில் அதன் ஆதிக்கத்தை நிலை நாட்ட எடுத்து வரும் முயற்சிகள் குறித்து இம்மாநாடு எச்சரிக்கிறது மத்திய தரைக்கடல் பகுதியில் இஸ்ரேலியர்களைப் பயன்படுத்துவது போன்று இப்பிராந்தியத்தில் இலங்கை தமிழர்களை அமெரிக்கா பயன்படுத்த எடுக்கும் முயற்சிகளை அம்பலப்படுத்தி அமெரிக்கா ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட இம்மாநாடு அறை கூவுகிறது.

ஜே வி. பி. சிஹல உறுமய பொது ஜன ஐக்கிய முன்னணி என்பவற்றுக்கூடாகவும் சில தமிழ் தலைமைகளுக்கூடாகவும் சில முஸ்லிம் தலைமைகளுக்கூடாகவும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை சூழ்நிலையை குழப்பும் இந்திய மேலாதிக்க நடவடிக்கைகளை இம்மாநாடு கண்டிக்கிறது.

பேச்சுவார்த்தையைக்குழப்பும் முயற்சிகளுக்குதுணைபோகும் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் தமிழ் முஸ்லிம் தலைமைகளை மக்கள் மத்தியிலிருந்து ஓரம் கட்டவும் மாநாடு கோரிக்கை விடுக்கிறது.

★ அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியமேலாதிக்கம் என்பவற்றுக்கு எதிரானபோராட்டத்தில் சிங்கள மக்களின் பங்களிப்பு மிகவும் அடிப்படையானதாகும் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு ஆதரவு கொடுத்து வருவது போன்று பேச்சுவார்த்தைக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பப்பட்டு வரும்இனவாதத்தை முறியடித்து அடக்கப்படும் தேசிய இனங்களின் உரிமைகளை ஐக்கியப்பட்ட இலங்கை நாட்டிற்குள் சுயாட்சியையும் சமத்துவத்தையும் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் நிலைநிறுத்துவதற்குஆதரவான போராட்டங்களை முன்னெடுப்பதன்மூலமேஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும்எதிராக சிங்கள மக்களின்போராட்டங்களை முழுமையானதாக்க முடியும்.

● தேசிய விடுதலைப் போராட்டம், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் என்பன 'ஏகாதிபத்திய உலகமய மாதலுக்கு எதிரான போராட்டத்தின் பகுதிகளாகும்.

அத்துடன, உலகமயமாக்கலுக்கு இணங்கிப் போகும் பாதையிலன்றி ஏகாதிபத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் இணங்கிப் போகும் பாதையிலன்றி தேசிய இனங்களினதும் இலங்கை நாட்டினதும் சுதந்திரம், சுயாதிபத்தியம். இறைமை என்பவற்றின் அடிப்படையில் தற்போதைய பேச்சுவார்த்தை சூழ்நிலை பயன்படுத்தப்பட வேண்டும்.

● சமாதானத்தை உச்சரித்துக் கொண்டே நாட்டுமக்களின் மீது பொருளாதார சுமைகளை மேலும் மேலும் புதிய வரிகளை அறிமுகம்செய்வதன் மூலம் விலைவாசிகளை உயர்த்துவதன் மூலமும்சுமத்திவரும் ஐ தே முன்னணி அரசாங்கத்தை இம்மாநாடு கண்டிக்கிறது அத்துடன் மக்களுக்கு சம்பள உயர்வு. விலைவாசி குறைப்பு, மானியங்கள் போன்ற நிவாரணங்கள்வழங்கப்படல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றது.

● ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு இணங்கி ஐ.தே.மு அரசாங்கம் முன்னெடுக்கின்ற தனியார் மயத்தையும் மேல்கொத்மலை நீர் மின்சாரத் திட்டம், திருகோணமலை அனல்மின்சாரத் திட்டம் போன்ற அழிவு பூர்வமான திட்டங்களையும் கலவி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற நலன்புரித்துறைகளை முற்றாகத் தனியார் மயமாக்கும் நடைமுறைகளையும் கண்டிப்பதுடன் அவற்றுக்கு எதிராக ஐக்கியப்பட்ட வெகுஜன எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

● இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும், பயங்கரவாதத்திற்கும், எதிராக போராடுவதாகக் கூறிக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா செய்துள்ள ஆக்கிரமிப்பையும் ஈராக்கிற்கு எதிராக மேற்கொள்ளும் போர் முன்னெடுப்புக்களையும் கண்டிக்க வேண்டும்.

● இன்றைய உலக நெருக்கடிகளுக்கு அடிப்படைக் காரணமான ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்து வரும் சகலவிதமான போராட்டங்களுக்கும் எமது கட்சி அதன் ஒத்துழைப்பை தெரிவித்துக் கொள்வதுடன் சுய நிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிப்பதுடன் இன்றைய நெருக்கடிகளுக்கு மாற்று சோஷலிஸமே என்பதையும் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவது மட்டுமன்றி நமது நாட்டின் நடைமுறையில் இருந்து வரும் நிலவுடமை முதலாளித்துவ அமைப்புக்கு மாறாக சோஷலிஸத்தை எட்டுவதே எமது மக்களுக்கு பூரணமான விடுதலையை கொண்டு வரும் ஒரே வழிமுறை ஆகும் என்பதை இம்மாநாடு பிரகடனம் செய்துள்ளது (உ)

## சக்கர நாற்காலிகள் 100 புலிகளுக்கு அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக்கு பல மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக ஸ்ரீலங்கா புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை வவுனியாகச்சேரியில்புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தலைமையில் மேற்படி மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரச ஊழியர்களுக்கு பேர்க்கால நட்டஈடாக 6 மில்லியனும் மருத்துவ உபகரணங்களைப் பெறுவதற்கு 7 மில்லியனும் கணனி உபகரணங்கள் மற்றும் அதற்குரிய மின் பிறப்பாக்கிகளுக்கு ஒன்றரை மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது;

இவைதவிர படைத்துறை முன்னாள் பேச்சாளரும் தற்போது படைத்துறைத் தலைமையகத்தில் பணிபுரிபவருமானபிரிகேடியர்சனத்கருணாரட்ண ஒவ்வொன்றும் 16ஆயிரத்து 500 ரூபாபெறுமதியான 100 சக்கர நாற்காலிகளை விடுதலைப் புலிகளிற்கு அன்பளிப்புச் செய்துள்ளதுடன்,

புனர் வாழ்வு அமைச்சு ஊடாக மேலும் 800சக்கர நாற்காலிகளை வழங்குவதாகவும் கூறியுள்ளார் (உ-10)

## தேங்காயின் விலையைக் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்து குறைந்த விலையில் பாவனையாளர்களுக்கு வழங்க வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சுநடவடிக்கை எடுத்து வருகிறது.

இனிவரும் பண்டிகைக் காலத்தில் தேங்காயின் பாவனை அதிகரிக்கக் கூடும் எனக் கருதியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வியட்நாம், கர்நாடகம், நைஜீரியா ஆகியவற்றில் இருந்து தேங்காய்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

(உ)

## வன்னி சென்ற புலிகள் மட்டக்களப்பு திரும்பினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து மாலதி நினைவு தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வன்னிக்கு சென்ற185 விடுதலைப் புலிகள் நேற்று காலை 6 பஸ் வண்டிகளில் மீண்டும் மட்டக்களப்பிற்கு திரும்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி றொபேட் தலைமையில் சென்ற இவர்களில் 70 ஆண் போராளிகளும் 115 பெண் போராளிகளும் அடங்கியிருந்தனர்.

இவர்கள் ஓமந்தையில் இருந்து மட்டக்களப்பு செங்கலடி சறுத்தப்பாலம் வரை இராணுவ வழித் துணையுடனே பி.ப 3 மணிக்கு மட்டக்களப்பை சென்றடைவர் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. (உ-10)

### கந்தசஷ்டி விரதம் அனுட்டித்த

## களுத்துறை கைதிகளுக்கு சோறு பரிமாறப்பட்டது

(கொழும்பு)

கந்தசஷ்டி விரதம் அனுட்டித்து வந்த 130 களுத்துறைச் சிறைக்கைதிகளுக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் பணிப்பில் நேற்றையதினம் காலை பாரணை சோறு வழங்கப்பட்டது.

அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஐ. தி. சம்பந்தன், உதவிப் பணிப்பாளர்களான குமாரவடிவேல், வீ. விக்கிரமராஜா ஆகியோர் நேற்றுக் காலை சிறைச்சாலைக்குச் சென்று பாரணைச்சோறு மற்றும் பழவகைகளை கைதிகளுக்கு வழங்கி அவர்கள் 6 நாட்களாக மேற்கொண்டுவந்த விரதத்தை முடித்து வைத்தனர். (உ)

## கிபிர் விமான விபத்து நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

குளியப்பிட்டி பகுதியில்விபத்துக்குள்ளானவிமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானம் சம்பந்தமாக இஸ்ரேலிய நிபுணர்கள் குழு விசாரணைகளை நடத்திஅறிக்கை சமர்ப்பித்துள்ளது,

விமானம் விபத்துக்குள்ளான போது விமானத்தின் இயந்திர நிலைமை, அதன் தொழில் நுட்ப நிலைமை ஆகியன தொடர்பாகவே இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் விமானத்தின் விபத்துக்குள்ளான பகுதிகளை இஸ்ரேலுக்கு எடுத்துச் சென்று மேலதிக சோதனைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

### தமிழர்கள்

தேச செயலர், விடுதலைப்புலிகளின் கும்புறுப் பிட்டி பிரதேச பொறுப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-8)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

## தெரிவு செய்யப்பட்டோர் விபரம் தொடர்ச்சி...

### பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

கி/ப/16 திருமதி பாலபரமேஸ்வரி சின்னத்துரை
கி/ப/86 கனகசபை பாலசிங்கம்
கி/ப/166 செல்லத்துரை குகதாஸ்
கி/ப/273 ஜெயந்தி ஜெயம்
கி/ப/460 திருமதி நிர்மலாதேவி அன்ரன்ஜெயக்குமார்

### வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு

யா/வ.கி/1 கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
யா/வ.கி/7 யாககோப்பு சந்தியோகு
யா/வ.கி/40 சங்கரப்பிள்ளை சோமசுந்தரம்
யா/வ.கி/78 திருமதி நாகேஸ்வரி சந்திரபாலன்
யா/வ.கி/107 ஏபிரகாம் வினாசித்தம் பொன்னு
யா/வ.கி/153 ஆசிர்வாதம் யோசேப்
யா/வ.கி/223 தம்பாப்பிள்ளை சந்திரசேகரம்
யா/வ.கி/302 தணிகாசலம் தர்மதாஸ்
யா/வ.கி/332 கயித்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
யா/வ.கி/524 கணபதிப்பிள்ளை முருகேசு
யா/வ.கி/603 சோமசுந்தரம் குணசீலன்
யா/வ.கி/617 செஸ்லஸ் யஸ்ரஸ் லெஸ்லி
யா/வ.கி/740 மோசெஸ் சூசைப்பிள்ளை
யா/வ.கி/750 சின்னையா தம்பிஜயா
யா/வ.கி/779 கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார்
யா/வ.கி/800 கௌரியல் மேரிறோஸ் பெர்னான்டோ
யா/வ.கி/822 முருகேசு ஜெகநாதன்
யா/வ.கி/860 கணபதி முருகன்

### சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

யா/சா/2 திருமதி இராசமணி சிவபாதம்
யா/சா/5 விஜயரத்தினம் யோககுமார்
யா/சா/6 திருமதி. ராசேஸ்வரி பொன்கலதாசன்
யா/சா/13 கந்தசாமி நவரத்தினம்
யா/சா/57 பூஸ்பலதா முத்தையா
யா/சா/66 திருமதி தில்லைநாயகி மகேஸ்வரா
யா/சா/80 செல்லப்பா நடராசா
யா/சா/109 திருமதி சிவபாக்கியம் கந்தப்பிள்ளை
யா/சா/116 வரதலட்சுமி கார்த்திகேசு
யா/சா/124 திருமதி சறோஜினிதேவி மனோகரன்
யா/சா/136 றோஸ் செல்வநாயகம்
யா/சா/244 திருமதி சந்திரமலர் வீரசிங்கம்
யா/சா/290 அம்பலவாணர் தம்பிஜயா
யா/சா/309 திருமதி தேவநாயகி செல்வராசா
யா/சா/336 சுந்தரம் சிவராசா
யா/சா/393 தம்பு சுப்பிரமணியம்
யா/சா/440 சின்னவன் சிவலிங்கம்
யா/சா/450 சபாரத்தினம் தியாகராசா
யா/சா/477 திருமதி இலட்சுமிப்பிள்ளை வாமதேவன்
யா/சா/480 திருமதி கலாராணி துஜியேந்திரா
யா/சா/510 அபூர்வசிங்கம் ஸ்ரீகாந்தா
யா/சா/558 தம்பிராசா துரைராசா
யா/சா/569 இராமசா[illegible] துரைசிங்கம்
யா/சா/593 திருமதி ஜெயந்தினி இரியஜெயம்
யா/சா/620 திரு[illegible] தங்கரத்தினம் மகாலிங்கம்
யா/சா/634 திருமதி புவனேஸ்வரி சிவகுரு
யா/சா/641 திருமதி சின்னத்தம்பி மாணிக்கம்
யா/சா/650 பத்மநா[illegible] பத்மசீலன்
யா/சா/718 திருமதி தங்கமுத்து பொன்னம்பலம்
யா/சா/739 திருமதி சாந்தி சுகுணேஸ்வரன்
யா/சா/758 திருமதி சிவகாமிப்பிள்ளை தில்லைநாதர்
யா/சா/799 செல்வநாயகம் இராசன்
யா/சா/807 கோமதி சண்முகலிங்கம்
யா/சா/848 திருமதி இந்துமதி சிவகணேசன்
யா/சா/923 செல்லப்பா சுப்பிரமணியம்
யா/சா/938 சின்னத்தம்பி வைரவப்பிள்ளை
யா/சா/954 இராமலிங்கம் ரவீந்திரன்
யா/சா/965 தம்பையா சிவராசா
யா/சா/1004 வினாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி
யா/சா/1083 செல்லத்துரை செல்வராசா
யா/சா/1169 தில்லைநடராசா சிவகரன்
யா/சா/1300 இரத்தினம் பொன்னுத்துரை
யா/சா/1487 செல்லையா திருநாவுக்கரசு
யா/சா/1521 வயிரமுத்து கிருஷ்ணன்
யா/சா/1557 சண்முகம் அமர்தலிங்கம்
யா/சா/1760 திருமதி சிவஞானவதி சிறீநாதன்
யா/சா/1768 தர்மலிங்கம் தர்மரத்தினம்
யா/சா/1831 திருமதி தையல்நாயகி கணபதிப்பிள்ளை
யா/சா/1842 கனகசபை பாலச்சந்திரன்
யா/சா/1905 வல்லிபுரம் நாகேஸ்வரன்
யா/சா/1932 மஞ்சுளா இளையதம்பி
யா/சா/1944 கதிரேசு கணேசன்
யா/சா/2015 குமாரலிங்கம் குணராசா
யா/சா/1045 சுந்தரம் சிவராசா
யா/சா/2085 நல்லையா ஜெயவீரசிங்கம்
யா/சா/2133 இளையப்பா சபாநாதன்
யா/சா/2148 தாமோதரம்பிள்ளை கனகசிங்கம்
யா/சா/2206 கணபதிப்பிள்ளை பாஸ்கரன்
யா/சா/2290 கதிரன் சிவஞானம்
யா/சா/2295 திருமதி விமலேஸ்வரி தியாகராசா
யா/சா/2441 திருமதி அன்னமுத்து ஆறுமுகம்
யா/சா/2458 திருமதி இராஜேஸ்வரி பாலசுந்தரம்
யா/சா/2523 கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம்
யா/சா/2924 சின்னத்தம்பி திருஞானசம்பந்தர்
யா/சா/2935 தம்பையா சிவானந்தன்
யா/சா/3003 நீலாம்பிகை இளையதம்பி
யா/சா/3264 கந்தையா தேவசீலன்
யா/சா/3366 வேலுப்பிள்ளை பூபாலபிள்ளை
யா/சா/3391 சத்தியவதி வடிவேலு
யா/சா/3443 சின்னத்தம்பி மகாலிங்கம்
யா/சா/3698 திருமதி நிமலா சந்திரன்
யா/சா/3805 சின்னையா செல்லையா
யா/சா/3827 திருமதி நந்தகுமாரி நாகராசா
யா/சா/3863 கனகசரா கணேசலிங்கம்
யா/சா/3978 வீரசிங்கம் தில்லைநடராசா
யா/சா/4374 கதிர்காமநாதன் நகுலேஸ்வரன்
யா/சா/4435 திருமதி மேரிங்சுலொசனா றெஜிபிறேம்குமார்
யா/சா/4486 திருமதி செபஸ்ரஜயானா ஞானப்பிரகாசம்
யா/சா/4500 திருமதி சுந்தரேஸ்வரி சிவதாஸ்
யா/சா/4602 சிற்றம்பலம் முருகேசு
யா/சா/4697 பெரியதம்பி செல்லத்துரை
யா/சா/4811 டானியல்எட்வின்கொடிதோர் விஜயரத்தினம்
யா/சா/4868 தம்பு தம்பையா
யா/சா/4894 செல்லையா ஜெயராஜா
யா/சா/4984 ரதிகலா சின்னராசா
யா/சா/5226 திருமதி சாந்தாதேவி மகேந்திரன்
யா/சா/5244 இந்துமதி கணபதிப்பிள்ளை
யா/சா/5355 திருமதி நகுலேஸ்வரி நவராசா
யா/சா/5457 திருமதி கமலாவதி சிவநேசன்
யா/சா/5754 இராசையா பாலச்சந்திரன்
யா/சா/5783 சிவமணி துரைச்சாமி
யா/சா/6120 கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை
யா/சா/6121 சின்னத்துரை பாலராசா
யா/சா/6231 நெல்லிநாதன் செல்வநாதன்
யா/சா/6286 கயல்விழி அருள்ம்பலம்
யா/சா/6688 காங்கேசு குலசேகரம்
யா/சா/6752 தேவசகாயம் இம்மனுவேல்தேவராஜா
யா/சா/6755 வட்டன் வேலாயுதம்
யா/சா/7000 திருமதி ஜெயமலர் அருமைத்துரை

### பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

யா/பரு/6 திருமதி சியாமளா சுந்தரலிங்கம்
யா/பரு/8 திருமதி சிவனேசம்மா விசாகரத்தினஜயர்
யா/பரு/10 சிதம்பரப்பிள்ளை நல்லையா
யா/பரு/16 திருமதி தங்கமணி குமரகுரு
யா/பரு/20 திருமதி தவமணி தம்பு
யா/பரு/49 நடராசா கனகசபை
யா/பரு/55 இராமசாமி வயித்திலிங்கம்
யா/பரு/63 செல்வச்சிவம் தெய்வச்சந்திரன்
யா/பரு/82 விசுவலிங்கம் தணிகாசலம்
யா/பரு/90 சண்முகம் இராசலிங்கம்
யா/பரு/91 குமாரசாமி தருமராசா
யா/பரு/97 திருமதி இந்துமதி ஜெயகோபால்
யா/பரு/99 துரைச்சாமி செல்வமாணிக்கம்
யா/பரு/109 திருமதி செல்வராணி கந்தசாமியார்
யா/பரு/125 நடனசிகாமணி பாலேந்திரன்
யா/பரு/132 சந்திரலிங்கம் பார்த்திபன்
யா/பரு/135 நாராயணசாமி கலைநேசன்
யா/பரு/142 ஆறுமுகக்கடவுள் சுபாஸ்ரஞ்சன்
யா/பரு/149 கந்தசாமித்துரை பாலேந்திரன்
யா/பரு/157 திருமதி அற்புதமலர் நித்தியானந்தம்
யா/பரு/161 திருமதி நவரத்தினம்மா கதிர்காமத்தம்பி
யா/பரு/168 திருமதி புஸ்பராணி வேலுச்சாமி
யா/பரு/172 வேலுப்பிள்ளை சுந்தரசிகாமணி
யா/பரு/191 செங்கல்வராசா சக்திவேல்
யா/பரு/195 சிவப்பிரகாசம் சிதம்பரநாதன்
யா/பரு/204 தங்கேஸ்வரராஜா ஜெயராஜ்
யா/பரு/209 மாணிக்கராசா சண்முகலிங்கம்
யா/பரு/216 திருமதி நாகசுந்தரேஸ்வரி இராமநாகதாசன்
யா/பரு/246 முருகுப்பிள்ளை பிறேம்குமார்
யா/பரு/283 திருமதி கமலாதேவி இராமச்சந்திரன்
யா/பரு/290 இரத்தினசபாபதிசர்மா வெங்கட்ராமன்
யா/பரு/304 கிருஷ்ணசாமி அருளானந்தம்
யா/பரு/332 திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம்
யா/பரு/378 கதிரவேற்பிள்ளை யோகனந்தசாமி
யா/பரு/420 திருமதி ஜெயந்தினி ஜெயபாலன்
யா/பரு/440 பாலசுந்தரம் உதயகுமார
யா/பரு/451 திருமதி விமலாதேவி உலகபாஸ்கரம்பிள்ளை
யா/பரு/458 வேலுப்பிள்ளை கதிர்காமலிங்கம்
யா/பரு/462 ஞானப்பிரகாசம் தேவதாஸ்
யா/பரு/465 வல்லிபுரம் சிவானந்தம்
யா/பரு/521 வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம்
யா/பரு/577 வடிவேலு சதானந்தம்
யா/பரு/592 கருப்பன் இடையான் லக்ஷ்மணன்
யா/பரு/616 திருமதி தங்கரத்தினம் வேலாயுதம்
யா/பரு/640 காயத்திரி பஞ்சரட்ணம்
யா/பரு/643 திருமதி அருந்தவதேவி சுந்தரலிங்கம்
யா/பரு/646 திருமதி நிர்மலாதேவி நடராஜா
யா/பரு/648 திருமதி பிரேமாவதி சாந்தலிங்கம்
யா/பரு/678 இராசரத்தினம் ரவீந்திரன்
யா/பரு/693 திருமதி கலாநிதி ஸ்ரீமுருகன்
யா/பரு/695 கந்தவனம் கனகரத்தினராசா
யா/பரு/729 திருமதி கமலேஸ்வரி சீவரத்தினம்
யா/பரு/733 வேலுப்பிள்ளை வீரகத்திஇராமநாதன்
யா/பரு/745 பொன்னுத்துரை தேவகுலேந்திரன்
யா/பரு/768 கோபால் சௌந்தரராஜா
யா/பரு/789 திருமதி பரமேஸ்வரி சிவச்செல்வம்
யா/பரு/793 திருமதி அபிராமிப்பிள்ளை பாலசிங்கம்
யா/பரு/814 திருமதி செல்வசிரோண்மணி ராமேஸ்வரன
யா/பரு/815 திருமதி இந்திராணி சதாசிவம்
யா/பரு/820 திருமதி அருட்புவனம் சௌந்தரராஜா
யா/பரு/855 சிவானந்தி பரமலிங்கம்
யா/பரு/867 தேவசுந்தரி சோமசேகரம்
யா/பரு/909 திருமதி காந்திமதி நவரட்ணம்
யா/பரு/918 திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை
யா/பரு/925 பொன்னையா பாலசுப்பிரமணியம்
யா/பரு/930 ஆறுமுகம் சிவானந்தன்
யா/பரு/937 திருமதி வனிதாதேவி ஜெயராசா
யா/பரு/991 திருமதி சிவமங்களம் கமலேஸ்வரன்
யா/பரு/1026 திருமதி கிருஸ்ணவேணி பத்மராசா
யா/பரு/1044 திருமதி புனிதவதி செல்வராசா
யா/பரு/1053 கிருஸ்ணபிள்ளை இராசையா
யா/பரு/1182 செல்வராஜினி சதானந்தர்
யா/பரு/1192 சீவரத்தினம் வடிவேலு
யா/பரு/1206 பிரான்சிஸ் அல்போன்ஸ்
யா/பரு/1223 திருமதி மங்களேஸ்வரி புவனேந்திரன்
யா/பரு/1226 திருமதி கமலாதேவி கந்தசாமி
யா/பரு/1231 தம்பிராசா செல்வராசா
யா/பரு/1236 திருமதி மேரிஆன் ஜெயராணி ஜோன்கிறிஸ்ரி
யா/பரு/1319 திருமதி இராஜேஸ்வரி யோசேப்பு
யா/பரு/1326 கந்தையா சுந்தரலிங்கம்
யா/பரு/1402 திருமதி மண்டலநாயகி சுந்தரலிங்கம்
யா/பரு/1403 இரத்தினவேலு ஹரிதாஸ்
யா/பரு/1498 திருமதி நாகரட்ணம் நடராஜா
யா/பரு/1520 திருமதிஸ்ரீரஞ்சனி வரதராசா
யா/பரு/1534 சுப்பையா உதயகுமார்
யா/பரு/1536 திருமதி யசிந்தா இம்மானுவல்
யா/பரு/1553 திருமதி திலகவதி ஜெகதீஸ்வரன்
யா/பரு/1723 திருமதி சகுந்தரநாயகி விக்னேஸ்வரன்
யா/பரு/1774 கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி
யா/பரு/1779 திருமதி கேதாரேஸ்வரி தருமரத்தினஜயா
யா/பரு/1806 ஞானசகாயம் செல்வகுமார்
யா/பரு/1816 திருமதி சுபத்திராதேவி யோகராஜா
யா/பரு/1823 சண்முகம் கதிரமலைகுருநாதன்
யா/பரு/1918 திருமதி தங்கலட்சுமி செல்வராசா
யா/பரு/1928 அருளம்பலம் பிறேமதாஸ்
யா/பரு/1986 சுப்பிரமணியம் சாந்தகுணவடிவேல்
யா/பரு/2039 கந்தசாமித்துரை ஜெயசோதி
யா/பரு/2044 திருமதி வசந்தாதேவி சிவானந்தவேல
யா/பரு/2048 திருமதி பிறேமா ஸ்ரீக்குமார்
யா/பரு/2170 திருமதி மகாலஷ்மி பிறேம்பாபு
யா/பரு/2200 சின்னையா குமாரசாமி
யா/பரு/2273 குலசிங்கம் பேரின்பநாதன்
யா/பரு/2352 திருமதி மாசிலர்தேவி இரத்தினசிங்கம்
யா/பரு/2376 கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/பரு/2395 திருமதி இந்திராணி வயிரமுத்து
யா/பரு/2406 இந்திராணி வல்லிபுரம்
யா/பரு/2530 திருமதி கமலாதேவி அருளானந்தம்
யா/பரு/2602 திருமதி புனிதவதி தங்கராசா
யா/பரு/2613 திருமதி இலட்சுமிப்பிள்ளை பொன்னையா
யா/பரு/2671 திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை
யா/பரு/2713 திருமதி நாகரஜனி கருணானந்தராஜா
யா/பரு/2851 திருமதி சுமதி சிறிலோகராசா
யா/பரு/2919 திருமதி மங்களேஸ்வரி குழந்தைவேற்பிள்ளை
யா/பரு/2934 திருமதி பவானி கிருஸ்ணகுமார்
யா/பரு/3092 திருமதி ஜசீந்தா ஜீவபாலநேசன்
யா/பரு/3147 திருமதி கேசில் அந்தோனிப்பிள்ளை
யா/பரு/3283 ஆழ்வார் முருகேசு
யா/பரு/3348 திருமதி பாமா சந்திரகுமாரன்
யா/பரு/3402 வேலும்மயிலும் காசிநாதன்
யா/பரு/3500 இராசையா சுப்பிரமணியம்
யா/பரு/3572 தர்மலிங்கம் யோகராசா
யா/பரு/3659 கிறிஸ்தொபர் அன்ரனிராசா
யா/பரு/3734 மாணிக்கம் சிவகுருநாதன்
யா/பரு/3762 திருமதி மகேந்திரராணி சின்னத்தம்பி
யா/பரு/3869 வேலன் கோபாலு
யா/பரு/3967 இராசையா பாலேந்திரன்
யா/பரு/4021 திருமதி சிவஞானம் ஞானசூரியம்
யா/பரு/4114 சிலுவேஸ்திரி வரப்பிரகாசம்
யா/பரு/4153 திருமதி ஈஸ்வரியம்மா சரவணமுத்து
யா/பரு/4218 பரமு சபாரட்ணம்
யா/பரு/4230 சுப்பையா நடேசு
யா/பரு/4278 பிறேமலதா சின்னத்துரை
யா/பரு/4282 தங்கராசா நவீந்திரராசா
யா/பரு/4312 வேலாயுதம் மகேஸ்வரன்
யா/பரு/4315 திருமதி ஈஸ்வரி இராசநாயகம்
யா/பரு/4354 திருழதி யோகாம்பிகை பரஞ்சோதி

### வேலணை உதவிஅரசாங்க அதிபர் பிரிவு மிகுதி....

யா/வே/959 தம்பு மாணிக்கம்
யா/வே/996 கந்தையா சிவசரணம்
யா/வே/1005 மகாலட்சுமி இரத்தினம்
யா/வே/1023 திருமதி இந்திராதேவி விக்கினேஸ்வரராசா
யா/வே/1100 இராஜதுரை விஜேந்திரன்
யா/வே/1128 வெற்றிவேலு காந்தமூர்த்தி
யா/வே/1194 திருமதி திலகவதி அருணகிரி
யா/வே/1222 பரமலிங்கம் தவராசா
யா/வே/1264 சபாபதி முருகேசு முத்துலிங்கம்
யா/வே/1271 திருமதி மகாலட்சுமி சிவநாதன்
யா/வே/1275 திருமதி சிவக்கொழுந்து பாலசிங்கம்
யா/வே/1282 திருமதி சுஜாதா சதாசிவலிங்கம்
யா/வே/1284 கந்தையா சண்முகம்
யா/வே/1346 சுப்பையா பற்குணராஜா

### மானிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மிகுதி....

யா/மா/3866 திருமதி ஆன்றோகினி அருள்நேசன

### வெளியகல்வு

யா/வெ/2 திருமதி அன்னம்மா செபஸ்தியாம்பிள்ளை
யா/வெ/4 திருமதி புஸ்பராணி ஸ்ரீகுணநாதன்
யா/வெ/6 முருகேசபிள்ளை சந்திரகுமார்
யா/வெ/7 விசுவலிங்கம் பிரபாகரன்
யா/வெ/8 சுவாமிநாதன் பாலேந்திரா
யா/வெ/9 திருமதி கமலாசினி ஸ்கந்தராசா
யா/வெ/15 திருமதி சுதந்திரா செல்வலிங்கம்
யா/வெ/16 சுப்பிரமணியம் யோகரத்தினம்
யா/வெ/17 திருமதி மேரிமாக்கிரட் சுவாம்பிள்ளை
யா/வெ/18 நாகலிங்கம் இரத்தினம்
யா/வெ/19 திருமதி சூசன் சுகிர்தம் சில்வஸ்ரர்
யா/வெ/20 திருமதி மரியா இனசன்ரீனா மரியாம்பிள்ளை
யா/வெ/21 திருமதி கமலாதேவி கோபாலரத்தினம்
யா/வெ/23 திருமதி சிவபாக்கியயோகேஸ்வரி இராசலிங்கம்
யா/வெ/24 திருநாவுக்கரசு சிறிதரன்
யா/வெ/27 திருமதி மங்கையற்கரசி இரட்ணசிங்கம்
யா/வெ/28 திருமதி ஜெயபதி தயாபரன்
யா/வெ/29 யசிந்திரா துரைசிங்கம்
யா/வெ/30 பொன்னம்பலம் சொர்ணலிங்கம்
யா/வெ/32 நாகலிங்கம் தனபாலசிங்கம்
யா/வெ/34 திருமதி இராஜலக்சுமி விஜயசூரியர்
யா/வெ/38 வேலுப்பிள்ளை ஆன்ந்தராசா
யா/வெ/41 திருமதி சுமேத்திரா கணேசமூர்த்தி
யா/வெ/42 திருமதி ஆனந்தி ஜெயதீசன்
யா/வெ/45 அருள்விழி அருளலிங்கம்
யா/வெ/47 திருமதி ரூபினி பாலச்சந்திரா
யா/வெ/50 பாலசிங்கம் கிரிகாலன்
யா/வெ/52 காவேரி கந்தையா
யா/வெ/53 இராமலிங்கம் மார்க்கண்டு
யா/வெ/54 தேவராணி வைத்திலிங்கம்
யா/வெ/55 வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார்
யா/வெ/59 திருமதி பத்மலோசா இரவீந்திரன்
யா/வெ/61 திருமதி சகுந்தலாதேவி சச்சிதானந்தசிவம்
யா/வெ/63 மங்களேஸ்வரி இராமதாஸ்
யா/வெ/64 திருமதி சுமதி செல்வகுமார்
யா/வெ/65 கணபதிப்பிள்ளை விக்கினராசா
யா/வெ/69 அருளானந்தசிவம் சூரசங்காரசிவம்
யா/வெ/70 விஜியரூபி மகேந்திரன்
யா/வெ/71 திருமதி புவனேஸ்வரி ஞானலிங்கம்
யா/வெ/73 திருமதி வடிவாம்பிகை கணேசன்
யா/வெ/75 திருமதி யோன்ஓவ்ஆர்த் ஞானப்பிரகாசம்
யா/வெ/78 பொன்னையா முருகேசப்பிள்ளை
யா/வெ/79 தம்பிப்பிள்ளை வரதராஜா
யா/வெ/86 திருமதி தமயந்தி சந்திரபாலன்
யா/வெ/92 சண்முகம் பூபாலசிங்கம்
யா/வெ/95 வயிரகப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
யா/வெ/96 திருமதி பரமேஸ்வரி சிவபாதம்
யா/வெ/100 திருமதி முத்துமலா விஜயரத்தினம்
யா/வெ/104 திருமதி கலைஞானபுவனபதி சாம்பசிவம்
யா/வெ/108 ஜேம்ஸ் பிலிப்ஸ்
யா/வெ/109 மயில்வாகனம் சுந்தரலிங்கம்
யா/வெ/110 ஷர்ந்தினி தனபாலசூரியர்
யா/வெ/111 திருமதி சாந்தினி கணேசசுந்தரம்
யா/வெ/113 திருமதி தருமராணி சிற்சபேசன்
யா/வெ/114 திருமதி வனிமாமணி செல்வராசா
யா/வெ/117 அப்புத்துரை நித்தியானந்தன்
யா/வெ/121 திருமதி வசந்திராதேவி பரிமேலழகனார்
யா/வெ/124 திருமதி எவெரெஸ்ரா தோமி அன்ரனி
யா/வெ/126 சோமசுந்தரம் கணேசமூர்த்தி
யா/வெ/133 ஜீவராஜா அஜித்நியூட்டன்
யா/வெ/134 சிமியோன் மரியதாசன்
யா/வெ/138 கந்தையா மார்க்கண்டு
யா/வெ/141 திருமதி சின்னம்மா றேமன்
யா/வெ/142 காசிநாதர் சோமசுந்தரம்
யா/வெ/143 அம்பலவாணர் பவளத்துரை
யா/வெ/145 சின்னத்தம்பி கணேசன்
யா/வெ/147 திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி
யா/வெ/148 தெய்வேந்திரன் ரவீந்திரன்
யா/வெ/150 திருமதி கருணைநாயகி சீவரத்தினம்
யா/வெ/152 திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை
யா/வெ/155 ஜனனி இராமநாதன்
யா/வெ/162 கம்சா இரத்தினநாயகம்
யா/வெ/174 திருமதி சுவெந்தினி செல்வநாயகம்
யா/வெ/176 சுப்பிரமணியம் இரத்தினம்
யா/வெ/177 திருமதி கெங்காராணி பாலகிருஷ்ணன்

# இன்று ஒரு தகவல்

## உணவும் உறக்கமும்

சில விஷயங்களைச் சொல்கிறபொழுது, இது விஞ்ஞானிகள்சொல்லியிருப்பது என்று சொல்லுவேன் அவற்றுக்கெல்லாம் நிருபணம் உண்டு. அதாவது, சோதனைச் சாலையில் நிரூபித்துக்காட்டி வெளியிட்ட உண்மைகள் சில விஷயங்களைச் சொல்கிறபொழுது இது மெஞ்ஞானிகள் சொல்லியிருப்பதுஎன்று சொல்லுவேன். அந்த உண்மைகளுக்கு ஆராய்ச்சிச் சாலைகள் கிடையாது. நிருபணம் கிடையாது. அவைகள் அனுபவத்தில் கண்ட உண்மைகள், அதனால் பெரியவர்கள் ஒன்றைச்சொன்னால் அதை நிருபித்துக்காட்டினால் தான் நம்புவேன் என்றுசொல்லக்கூடாது; பொய்சொல்லாதே என்று சொன்னால்... 'சொன்னால்என்ன' என்று கேட்கக்கூடாது.

ஆனாலும் நம் முன்னோர்கள் சொல்லிவைத்த பல உண்மைகளை இப்பொழுது விஞ்ஞானம் ஒத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. இவ்வளவும் எதற்காகச் சொல்கிறேன் என்றால் சாப்பிடுவது எப்படி? தூங்குவது எப்படி? என்பவைகளைப்பற்றி நமது முன்னோர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள். அதில்கொஞ்சம் சொல்கிறேன். 'ஏன்? எப்படி' என்று கேள்விகள் கேட்காமல் காதில் வாங்கிக்கொள்ள வேண்டும்என்பதற்காக,

சாப்பிடுவதற்கும், தூங்குவதற்கும் நமக்கு இன்னொருவர் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம்இல்லை. இருந்தாலும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் பார்க்கலாம முதலில், கைகால் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார வேண்டுமாம். சாப்பிடுகிறபொழுது கோபம்வரக்கூடாதாம். சாப்பிட்டுக்கொண்டிருக்கிறபொழுது தேவைஇல்லாமல் பேசக்கூடாது. அவசரமாகவும்சாப்பிடக்கூடாதுஎவ்வளவுதான்அவசரமாக இருந்தால்கூட நின்றுகொண்டு சாப்பிடக்கூடாது. உட்கார்ந்துதான் சாப்பிடவேண்டும்.

பண்டிகை நாட்களில் எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிடவேண்டும். சாப்பிடுவதற்கு வாளழஇலைதான் மிகவும் நல்லதாம. வெள்ளிக்கிண்ணமும் நல்லதாம்.இவை எல்லாருக்கும் கிடைக்க வேண்டுமே! புரசஇலை லசீமைப்பூவரசஇலை பரவாயில்லையாம். தாமரை இலையைப் பின்பக்கம் சுத்தம் பண்ணி விட்டுச் சாப்பிடலாம். ஆல இலை நல்லதில்லையாம். வாழை மட்டையும் பரவாயில்லை.மண் சட்டியில் சாப்பிட்டால் உடம்புக்கு நல்ல குளிர்ச்சியாம். வெள்ளித் தாம்பாளத்தில் பால் சோறு சாப்பிட்டால் உடம்பிலுள்ள இரத்தம் சுத்தமாகும் என்று ஒரு தகவல், இவற்றை நான் சொல்கிற பொழுது, கிடைக்ாதவைகளையெல்லாம் ஏன் சொல்கிறாய்? என்று சொல்லி உடம்பில் உள்ள இரத்தம் சூடாகும்.

அதனால் அவை பற்றி அதிகம் வேண்டாம். இருந்தாலும் ஒரு தகவலாகக் கேட்டு வைத்துக் கொள்வதில் என்ன தப்பு?

தங்கப் பாத்திரத்தில் சாப்பிடுவது ஆண்களுக்கு மிகவும் நல்ல தாம் (தாது விருத்தி). மனதுக்குச் சந்தோஷம் கொடுக்குமாம். வாதநாடி, பித்த நாடிகளைச் சமநிலையில் வைக்குமாம் இதனால் நோய் வராது, இருக்கிற நோயும் குறையும். வெள்ளிப் பாத்திரம் வெண்கலப்பாத்திரங்கள் உடல் சோர்வை நீக்கும். இரத்த, பித்த ரோகங்களைப் போக்கும். அலுமினியப் பாத்திரம் உடம்புக்கு நல்லதில்லையாம், இரவுச் சாப்பாடு வெகுநேரம் கழித்துச் சாப்பிடக் கூடாது. இரவில் கீரை, நெல்லிக்காய், முள்ளங்கி, தயிர் வேண்டாமாம், இரவில் பால் சோறு நல்லது.பகலில் அது வேண்டாமாம். இரவுச் சாப்பாட்டில் மிளகு, சீரகம் சேர்வது நல்லதாம்.காலையில் இஞ்சி, மத்தியானம் சுக்கு, இரவு கடுக்காய், மருந்துக்கும் சாப்பாட்டுக்கும் இவைமிகவும் பொருத்தம்.

சரி, சாப்பாடு முடிந்தது. இனிமேல் தூங்குவது எப்படி? படுக்கையை நன்றாக உதறிப் போட வேண்டும். முறைப்படி இடது பக்கம் படுத்து, காலை நீட்டிக் கொண்டு தூங்குவது சிறப்பு, இது ஆயுளை அதிகப்படுத்துமாம். வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது. உத்தரத்தரத்துக்கு அடியில் படுக்கக் கூடாது.

இலவம் பஞ்சுத் தலையணை நல்லது. மூளையைப் பாதுகாக்கும், பருத்திப்பஞ்சு- மன உளைச்சல்- சலனம் ஆகியவற்றை உண்டாக்குமாம். இறப்பர் தலையணை நல்லதில்லையாம்.

சாப்பிடும் பொழுது இடையில் தண்ணீர் குடிக்க வேண்டாம். தாகம்- விக்கல் எடுத்தால்குடிக்கலாம். எந்தவகைப் பாத்திரத்தில் தண்ணீர் குடிக்கிறோமோ அந்தப் பாத்திரத்துக்குத் தகுந்தபடிதண்ணீரின் குணம் மாறுமாம். எதற்கு இவற்றையெல்லாம் வேலையின்றிச் சொல்லிக் கொண்டிருக்கின்றாய்? என்று கேட்காதீர்கள். புகழையும்- பணத்தையும்-பதவியையும்சேர்த்து என்ன பிரயோசனம்? நிம்மதியாகச் சாப்பிட வேண்டும். நிம்மதியாகத் தூங்க வேண்டும். இவை இல்லாவிட்டால் அது என்ன வாழ்க்கை?

எங்கள் ஊர்ப்பக்கத்தில்ஒரு அம்மா! அதிகமாகப் படிக்காதவர். மிகவும் நன்றாகச் சமைப்பார்.வகைவகையாகச் சமைத்து வாழை இலையிலே பரிமாறிவைத்துவிட்டுஅவரின் வீட்டுக் காரரைச் சாப்பிடக் கூப்பிடுவார். எப்படித் தெரியுமா? இதோ எடுத்து வைத்திருக்கின்றேன். வந்து கொட்டிக் கொள்! அவரும் கோபப் படாமல் வந்து கொட்டிக் கொண்டு போய் விடுவார்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸ்மா அதிபர் திட்டங்கள் வகுப்பு

(கொழும்பு)

குற்றச் செயல்களை முற்றாக ஒழிப்பதும், முடிந்த வரையில் தடுப்பதும் பொலிஸாரின் முதன்மைக் கடமையாகும். இந்த வகையில் இதற்கான செயற்திட்டங்களை நான் வகுத்திருக்கிறேன்.

இவ்வாறு புதியபொலிஸ்மா அதிபர் ரீ. ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; போதைப் பொருட் பணியகத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு ஏற்கனவே இது தொடர்பிலான பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

போதைப் பொருட்களை வைத்திருப்பவர்களை கைது செய்வதற்கென சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

போதைப் பொருள் வியாபாரிகளுடன் தொடர்புடைய பாடசாலைக்கு அண்மையிலுள்ள கடைகள், தேநீர் கடைகள், குளிர்பானக் கடைகள் என்பன சிவில் உடை தரித்த பொலிஸாரால் கண்காணிக்கப்படும்.

சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள், வர்த்தக மையங்கள், சனசமூகநிலையங்களில் பொலிஸ் அதிகாரிகள் குற்றத்தடுப்பு நடைமுறைகள் பற்றி விரிவுரைகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும், திணைக்களத்தில் பொறுப்பேற்கும் தன்மை குறைவடைந்து விட்டது. தமது செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் அவ்வாறு செய்யாதவிடத்து அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒவ்வொரு பொலிஸ் அதிகாரியும் பொறுப்பேற்க வேண்டியவரே.

பொலிஸ் சேவைகள் உரிய நேரத்திலும், பயனுள்ளவிதத்திலும், தேவைக்கு ஏற்றவிதத்திலும் இருத்தல் வேண்டும். இவர்களின் செயல் நிறைவேற்றத்தின் தரங்களை உயர்த்தும் விதத்தில் வெகுமதிகள் வழங்கப்படவிருக்கின்றன. பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு ரூபா 10 ஆயிரமும், பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு 25ஆயிரமும் சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு 40 ஆயிரமும்வழங்கப்படும் என்று தெரிவித்தார். (உ)

# வடகிழக்கு புனர்வாழ்வு 1500 மில்லியன் தேவை

## திறைசேரியிடம் கோரிக்கை

(கொழும்பு)

புனர்வாழ்வு அதிகாரசபை, வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கென ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவைதிறைசேரியிடம் கோரியுள்ளது.

இதேவேளை, கோரப்பட்ட மேற்படி நிதியில் 73 மில்லியனுக்கான அங்கீகாரத்தை திறைசேரி வழங்கியுள்ளதாகவும் நிதி கைவந்து சேர்ந்ததும் தமதுபணி ஆரம்பமாகும்எனவும் புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் எஸ். சுபைர்தீன் தெரிவித்துள்ளார். (உ)

# அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் சொத்துகள் அபகரிப்பு

(கொழும்பு)

மன்னார் பேசாலை கடற்பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று இந்தியப்படகுகளை அப்பகுதி மீனவர்கள் கடத்திச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மூன்று சிறிய படகுகளில் வந்த 17 பேர் இந்திய மீனவர்களைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த சுமார் 200 கிலோகிராம் எடையுள்ள இறாலையும் அபகரித்து சென்றுள்ளனர் என மன்னார் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கு கடற் பிரதேசங்களில் அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும், அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கம் பிரதமரை ஏற்கனவே கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அபிவிருத்திப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன்தொழில்நுட்பநிறுவனம் யாழ். குடாநாட்டுப் பகுதியில் பல்வேறு புனரமைப்பு அபிவிருத்தி திட்டங்களை மேற் கொள்ளவுள்ளது.

இதன் முதல்கட்டநடவடிக்கையாக வடக்கு-கிழக்குப்பகுதியில் உள்ள 75 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுபுனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும் தலா 7 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியுதவியை ஐரோப்பிய சமூகம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# பாராட்டிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசுவைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுஇன்று காலை 9.30 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் சி. நல்லகுமார் தலைமையில் கலாசாலை ரதிலஷ்மிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி, கலாநிதி க. சொக்கலிங்கம், வைத்திய கலாநிதி சி.சிவஞானசுந்தரம் கலாசாலை உப அதிபர் வே. க. கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ)

மேல் மாகாணசபை உறுப்பினர்கள்

# மக்களின் பணத்தில் ஆடம்பர சுற்றுலா

(கொழும்பு)

மக்களின் அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறியே மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிபீடம் ஏறுகிறார்கள். ஆனால் இவர்கள் சுயஇலாபம் கருதி பொதுமக்களின் பணத்தை பயன்படுத்தி தமது ஆடம்பர செயல்பாடுகளை நிறைவேற்றுகின்றனர். இந்த வகையில் வடமேல் மாகாணசபைஉறுப்பினர்களும் இதற்குவிதிவிலக்காகவில்லை.

வடமேல் மாகாணசபை உறுப்பினர்களின் செயற்பாடு சம்பந்தமாக வெளியான கருத்துக் கண்ணோட்டம் ஒன்றில்மேற்கண்டவாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கருத்துக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமேல் மாகாணசபையில் 52 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 42 பேர் கடந்தமாதம் சுற்றுலாப் பயணம் ஒன்றைமேற்கொண்டு தாய்லாந்து சென்றுள்ளனர்.

வடமேல் மாகாணசபைக்கு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட சுமார் 80 லட்சம் ரூபா பணமே இப்பயணங்களுக்காக செலவழிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர்கள் அமைச்சர்கள் செயலாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவினரே கடந்த ஒக்டோபர் 02ம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை தாய்லாந்து சென்றுள்ளனர்.

இவர்களில் சிலர் கடந்த 19 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை அங்கேயே தங்கியிருந்து தமது சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தொடக்கம் 2 இலட்சம் ரூபாவரைக்கும் செலவழிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சுற்றாடல் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் அவுஸ்திரேலியா சென்றனர்.

ஆனால் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் ஒருவார காலப் பகுதியிலேயே இவர்கள் தாய்லாந்து சென்றுள்ளனர்.

இதேவேளை மாகாணசபையின் பிரதான செயலாளர் அழையா விருந்தாளியாக அங்கு சென்றுள்ளார். இவ்வாறு அவர் அரசாங்கத்தின் பணத்தைச் செலவழித்து அங்கு சென்றிருப்பது தமது உறவினர் ஒருவரின் மகளின் திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காகத்தான் என்பது விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் தங்கி இருந்த காலத்தில் 25 டொலர்களை இவர் பிரயாணப்படியாக பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இதுதொடர்பாக வடமேல் மாகாண சபையின் ஏனைய உறுப்பினர்கள் பலத்தகண்டனங்களையும், ஆட்சேபங்களையும் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது. (க-பி-8)

# வடமராட்சி கிழக்கில் கணனிப் பயிற்சித் திட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கிலுள்ள இளைஞர், யுவதிகளிடையே கணனி பற்றியஅறிவை வளர்க்கும் நோக்குடன் வடமராட்சிகிழக்கு சூழல் பாதுகாப்புச் சபை குடத்தனை தென்இந்தியத் திருச்சபையில் இலவச கணனி பயிற்சித் திட்டத்தை விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத்திட்டத்திற்கெனகணனி உபகரணங்கள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (உ-43)

# பரு. - மருதங்கேணி வீதியை மக்கள் பாவனைக்கு திறந்துவிட கோரிக்கை

## போர்நிறுத்த கண்காணிப்பு குழுவுக்கு கடிதம்

(திருநெல்வேலி)

குடாரப்பு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களின் ஒரேயொரு பிரதான வீதி திறக்கப்படாமலிருப்பதால் அப்பகுதிமக்கள் பெரிதும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

குடாரப்பு-சுண்டிக்குளம் வீதி திறப்பதன் அவசியம் குறித்து வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 1991ஆம் ஆண்டு தொடக்கம் பல இராணுவ அனர்த்தங்களால் இடம்பெயர்ந்துசென்ற வடமராட்சி கிழக்கு பிரதேசமக்கள் தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் குடாரப்பு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பிரதேசத்தில் கடந்த 6 மாதங்களிற்குள் மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த பதினோராயிரத்திற்கு மேற்பட்ட மக்கள்தமது சொந்த வதிவிடங்களில்குடியமர்ந்துள்ளனர். ஆனால் இவர்கள் தமது அத்தியாவசிய தேவைகளைப் பெறுவதற்கு மேற்படி வீதி திறந்துவிடப்படாமலிருப்பதால் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசம் ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புறுவதற்கும் தமது அத்தியாவசிய மற்றும் நிர்வாக செயற்பாடுகளிற்கு இணைப்பாக அமைந்துள்ள வீதியும் இதுஒன்றேஆகும். எனவே இத்தகைய வீதி தடுக்கப்பட்டிருப்பதால் இப்பகுதி மக்கள் இரண்டுமடங்குதூரத்தைக்கடந்து தமது அத்தியாவசிய தேவைகளைப் பெறவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் வைத்திய வசதிகள் போதுமானளவு ஏற்படுத்தப்படவில்லை. ஆதலால் மக்கள் தமது வைத்திய தேவைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஏ-9பாதையினூடாகஇரண்டு மடங்கு தூரத்தைக்கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அத்துடன் பருத்தித்துறையிலிருந்து நடமாடும் சேவையை நடாத்திவரும் பருத்தித்துறை சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமது சேவையைத் திறம்பட நடாத்தமுடியாமல் இருக்கின்றனர்.

இங்கே எட்டு பாடசாலைகள் மீள ஆரம்பித்து செயற்படத்தொடங்கியிருக்கின்றன. இப் பாடசாலையில் சேவை ஆற்றும் ஆசிரியர்களில் பெருமளவு தொகையினர் வடமராட்சி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் இவர்கள் இப்பகுதியில் தற்போதைய நிலையில் தங்கி இருந்து கடமையை மேற்கொள்வதற்கு வசதியற்றதால் நாளாந்தம் கூடுதலான தூரத்தைக்கடந்து இப் பிரதேசத்தில் கல்விக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது இவர்களுக்கு மிகுந்த அசௌகரியநிலையைத்தோற்றுவிப்பதுடன் வீணான செலவிற்கு ஆளாவதுடன் இப் பகுதி மாணவர்களின் கல்வி நிலை மேம்படுவதற்கும் இப் பாதைத்தடை இடையூறாகின்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பணிமனை உரிய இடமான மருதங்கேணியில் மீள ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றது. இங்கே பணிபுரியும் உத்தியோகத்தர்கள் 18 மைல்களைக் கடந்து அலுவலகத்திற்கு செல்வதற்கு பதிலாக நாளாந்தம் 40 மைல்களைக் கடந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இப்பாதைத் தடையினால் இப்பிரதேசம் இரண்டு பிரிவாகத் துண்டிக்கப்பட்டிருப்பதால் அம்பன் தொடக்கம்— மணற்காடு வரையான மக்கள் பருத்தித்துறை கொடிகாமம்-புதுக்காடு வீதி ஊடாக மேலதிகமாக 30 மைல்களைக் கடந்து பிரதேச செயலகத்துதிற்கு வந்து தமது தேவைகளைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன், போக்குவரத் சேவையும் இப்பிரதேசத்தில் பூரணமாக ஏற்படுத்தப்படாத நிலையினால் மக்களும், அரச உத்தியோகத்தர்களும்மிகுந்த சிரமத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் உரிய இடமான மருதங்கேணியில் தலைமைச் செயலகத்தை மீள ஆரம்பித்து செயற்பட்டு வருகின்றது. பிரதேசம் துண்டாடப்பட்ட நிலையினால் சங்க எல்லைப்பரப்பும் துண்டாடப்பட்டுள்ளது.

அதன் செயற்பாடும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கின்றது. பாதைத் தடையில் மறுபக்கத்திலுள்ள பிரதேசத்தில் வசிக்கும் பணியாளர்களும் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலே அலுவலகத்திற்கு கடமைக்கு வரவேண்டிய நிலை காணப்படுகின்றது. கிளைகளுக்கான பொருட்களை அனுப்புவதில் சிரமமும் போக்குவரத்துக்கூலி கூடுவதால் பொருட்களை சீரான முறையில் மக்களுக்கு வழங்க முடியாதும் உள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் மீள ஆரம்பித்துச் செயற்படத் தொடங்கியுள்ளது. அதனுடைய செயற்பாடும், இப்பாதைத் தடையினால் சிரமத்தைஎதிர்நோக்குகின்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கமக்கார அமைப்புக்கள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்பட்டு செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தினுடைய முழுமையான செயற்பாட்டிற்கு இப் பாதைத் தடை ஒரு தடையாக அமைந்துள்ளது

மேற்படி தொழிலாளர்களின் உற்பத்திசந்தைவாய்ப்புக்களுக்கு தடையாக இருக்கிறது.

மக்கள் இப்பிரதேசத்தில் வேகமாக மீளக்குடியேறி வருவதால் மீளக்குடியேற்றச் செயற்பாடுகள் இப்பகுதியில் துரித கதியில் மேற்கொள்ள வேண்டிய கடமை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு இருக்கின்றது. ஆனால் அவர்கள் இவற்றை நிறைவேற்றுவதற்கு மேற்படி பாதை திறந்துவிடப்படாமல் மிகுந்த இடையூறாக இருக்கின்றது இதன் காரணமாக இப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு மிகுந்த தடையாக அமைந்துள்ளது.

● இப்பாதைத்தடை முகாம் அமைக்கப்பட்ட பகுதியில் சுமார் 1500 குடும்பங்களை உள்ளடக்கிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படாமல் இருக்கின்றது. கடல்வளத்தைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

அத்துடன் இதனால் பெருமளவு விவசாய நிலங்கள் பயனற்ற நிலையில் காணப்படுவதால், இப்பகுதி மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழவேண்டிய நிலையிலுள்ளனர்.

அத்துடன், மக்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்ட இப்பிரதேசத்திலேயே வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது.

இரண்டு வருடங்களாக மூடப்பட்டிருக்கின்ற இந்த ஆலயம் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து தரிசனத்திற்கு திறந்து விடப்படாமல் இருப்பது இப்பிரதேசமக்களின் விசனத்திற்குள்ளாகியிருக்கின்றது. இந்த ஆலய வருடாந்த உற்சவ தினம் இன்னும் இரண்டு வாரத்தில் வரஇருக்கின்றது. இந்த வருடமாவது இத்தரிசனத்தைப் பெறுவதற்கு மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர்.

இப்பாதைத் தடையாலும், இப்பகுதியில் மக்களை மீள குடியமர அனுமதிக்காததினாலும் அம்பன் அரசினர் வைத்தியசாலை இயங்க முடியாத நிலையிலுள்ளது. இப்பாதை திறப்பதன் மூலமும், அப்பகுதியில் மீளக்குடியமர்த்த அனுமதிப்பதன் மூலமும் வடமராட்சி கிழக்கின் மக்களின் சுகாதார நலன்களையும் வீணான உயிரிழப்புக்களையும் தடுப்பதற்கு இப்பாதையானதும், அம்பன் அரசினர்வைத்தியசாலை இயங்க வைப்பதும் அவசியமாகும். எனவே பாதை திறக்கப் படுவது மிக அவசியமானது ஆகும்.

ஆகவே இப்பாதைத் தடையானது வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை இருகூறுகளாக்கி, இடையில் மூன்றுகிராமங்களைச் சூனியப்பிரதேசமாகியதுடன் இப்பிரதேசமக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு முழுமையாகத் தடைவிதிப்பதனால், இம் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு பூரணமான ஒரு தடைக்கல்லாக அமைந்துள்ளது.

எனவே இப்பிரதேச மக்களின் பூரணமான நலனுக்காகவும், புரிந்துணர்வுஉடன்படிக்கையில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை வீண்போகாமல் இருப்பதற்கும் இப்பாதையை மக்கள் போக்குவரத்திற்குத் திறந்துவைக்குமாறு தங்களை இப்பிரதேச மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (க-43)

# குற்றச் செயல்களை அறிவிக்கும் முதல் மாநாடு

## இன்று பொலிஸ் தலைமையகத்தில்

(கொழும்பு)

குற்றச் செயல்களை அறிவிக்கும் முதலாவது ஊடகவியலாளர் மாநாடு இன்று பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

பொலிஸ்மாஅதிபராக அண்மையில் பதவியேற்ற ரீ. ஈ. ஆனந்தராஜா மேற்கொண்ட துறைசார் நடவடிக்கைகளில் இம்மகாநாடு மிகவும் முக்கியமானது.

அதிகரித்து வரும் குற்றச் செயல்கள், வீதி விபத்துக்கள் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து இன்றைய மாநாட்டில் அறிவிக்கப்படவுள்ளது. (உ-8)

# மட்டு. மாவட்டத்தில் மக்கள் குழு அமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ''மக்கள் குழு'' அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அம்மாவட்டத்தில் போர்ச் சூழலின் போது காணாமல் போனவர்களின் விபரங்களை திரட்டி உரிய நடவடிக்கை எடுக்கவும்இக்குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் பயங்கரவாத மற்றும் அவசர கால தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பாக உரிய அழுத்தங்களை கொடுப்பதற்காகவுமேஇக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் சட்டத்தரணிகள் சமூக சேவையாளர்கள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் ஆகியோர் அங்கம் பெறுகின்றனர். (உ-8)

சட்டவிரோத தொலைத் தொடர்பு

# வலையமைப்பை பாவித்த இலங்கையர் கைதானார்

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் தொலைத் தொடர்பு வலயமைப்பை உருவாக்கினார். என்ற குற்றச்சாட்டின் பேரில்இலங்கையர் ஒருவரை கொல்கொத்தா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்

பேடினன் ஸ்ரீகாந் கிருஷ்ண மூர்த்தி என்பவரே மேற்படி குற்றச்சாட்டில் பொலிஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் தொடர்பு கொண்டிருந்த இன்னொரு இலங்கையர் தலைமறைவாகியுள்ளதாக கொல்கொத்தா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொலைத் தொடர்பு அதிகாரசபையை மீறி இவர் தொலை பேசி அமைப்புக்களை பெற்று செய்திகளை அனுப்பியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து47செலூலர் தொலை பேசிகள் உட்பட நவீன செய்மதி தொலைத் தொடர்பு கருவிகளும் கைப் பற்றப்பட்டுள்ளன. (உ-8)

# இராசி பலன்

12-11-2002
(ஐப்பசி 26, செவ்வாய்)
அட்டமி மு இ. 7 27 வரை
அவிட்டம் பி இ 4 31 வரை
இராகுகாலம்-3.06-4.36
நல்லநேரம்-10.36-12.06
அட்டமி நவமி

**மேடம்**

எடுத்தகருமம் நிறைவேறும், குடும்பசுகம், புகழ், தனலாபம்

**இடபம்**

அதிகப்பிரயாசை, இஷ்டசித்தி, தொழில்நன்மை, அதிகாரம்

**மிதுனம்**

புதிய திட்டமிடல், பிரயாணம், வாக்குபலிதம், மனச்சஞ்சலம்

**கடகம்**

பிரயாணபயம், தேவையற்ற பிரச்சினை, முயற்சி தாமதம், திடீர்நன்மை

**சிங்கம்**

நண்பர்கள்சந்திப்பு, சௌக்கியவிருத்தி, காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை

**கன்னி**

தேகநலம், மனமகிழ்ச்சி, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய அனுகூலம்

**துலாம்**

புத்திரரால் கவலை, கௌரவக்குறைவு, செய்தொழில் நன்மை, முயற்சிதாமதம்

**விருச்சிகம்**

உடல்நலக்குறைவு, மனச்சோர்வு, உறவினர்சந்திப்பு, காரியதாமதம்

**தனுசு**

எண்ணங்கள் நிறைவேறும், கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை, பிரயாணநன்மை

**மகரம்**

நிலைமாற்றம், விவாதம், மாதர்நட்பு, காரியதாமதம்

**கும்பம்**

தெளிந்தசிந்தை, பெரியோர்சந்திப்பு, விருந்துபசாரம், உடல்நலம்

**மீனம்**

சயனசுகக்குறைவு, காரிய அலைச்சல், சிறுவியாதி, கோபப்படுதல்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

# ஒளித்திருந்து தாக்கியதில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மாலை வேளையில் மறைந்திருந்து தாக்கியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் 8 பிள்ளைகளின் தந்தையான சு. நடேஸ்வரன் (வயது 42) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-7)

# ஜே.வி.பி.யின் தேசிய மாநாடு

ஜே. வி. பி. யின் நான்காவது தேசிய மாநாடு நாளை புதன்கிழமை கொழும்பு சுகதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக ஜே. வி. பி. யின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் நேபாள நாட்டு எதிர்க்கட்சித்தலைவர் குமார்மாதவ் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (உ- 10)

| | |
|---|---|
| யா/வெ/178 | பத்மநாதன் நடனசிவம் |
| யா/வெ/179 | திருமதி ஸ்ரீரஜனி பமானந்தம் |
| யா/வெ/185 | திருமதி சோதிராணிகலாநிதி |
| யா/வெ/189 | திருமதி சிறிரஞ்சனி குமாரகுலசிங்கம் |
| யா/வெ/197 | கந்தசாமி பலராமன் |
| யா/வெ/201 | சாந்தமதி சந்தனம் |
| யா/வெ/202 | விஸ்வலிங்கம் பஞ்சலிங்கம் |
| யா/வெ/207 | திருமதி ரேவதி ஸ்ரீரங்கன் |
| யா/வெ/208 | நவரத்தினம் சுந்தரலிங்கம் |
| யா/வெ/212 | தம்பு சண்முகராசா |
| யா/வெ/213 | திருமதி ஜெயராணி இராமலிங்கன் |
| யா/வெ/214 | திருமதி பாலசவுந்தரி சின்னத்தம்பி |
| யா/வெ/216 | திருமதி மேரியூபிறேசியா பீற்றர்அலோசியஸ் |
| யா/வெ/219 | தருமலிங்கம் பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/221 | திருமதி பிறேமளா பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/230 | சிவகுருநாதன் முருகேசன் |
| யா/வெ/232 | திருமதி கலைமகள் குமாரலிங்கம் |
| யா/வெ/233 | திருமதி மேரிராணி இமானுவேல் |
| யா/வெ/234 | பொன்னம்பலம் முத்துக்குமாரு |
| யா/வெ/236 | திருமதி புவனேஸ்வரி கனகசபை |
| யா/வெ/237 | திருமதி யோகாதேவி மனோகரன் |
| யா/வெ/239 | கணேஸ் வைத்தீஸ்வரன் |
| யா/வெ/243 | பெருமாள்பிள்ளை சேதுராமன் |
| யா/வெ/246 | சின்னையா ரவிச்சந்திரன் |
| யா/வெ/248 | செல்லையா மகாதேவர் |
| யா/வெ/250 | காசிநாதர் இராஜேந்திரன் |
| யா/வெ/252 | சுப்பிரமணியம் கதிரவேல |
| யா/வெ/253 | மங்களம் ராஜன் |
| யா/வெ/254 | திருமதி நேவிஸ் றோசாறி |
| யா/வெ/255 | திருமதி ஆரோக்கியசீலி கோமஸ் |
| யா/வெ/257 | திருமதி சுபத்திரா குணபாலசிங்கம் |
| யா/வெ/260 | சிவசம்பு தங்கராசா |
| யா/வெ/262 | நிர்மலா சின்னத்துரை |
| யா/வெ/266 | ஆறுமுகம் சிவராசா |
| யா/வெ/271 | விசுவநாதர் ஸ்ரீஸ்காந்தா |
| யா/வெ/275 | திருமதி வனிதாமணி கோபநாதன் |
| யா/வெ/280 | பிராமநாயகம் சந்தணமுத்துச்சாமி |
| யா/வெ/283 | சுப்பிரமணியம் சிங்காரவேல் |
| யா/வெ/285 | வேலுப்பிள்ளை பிறேம்குமார் |
| யா/வெ/289 | திருமதி சந்திரிகா அருட்செல்வம் |
| யா/வெ/290 | பிறேமலதா உதயகுமாரநாதன் |
| யா/வெ/297 | திருமதி கனகம்மா மழவராயமுதலி |
| யா/வெ/302 | மரியதாஸ் டோனிகேட்டிஸ் |
| யா/வெ/305 | சந்தாம்பிள்ளை மேஜர் அன்ரன் |
| யா/வெ/306 | திருமதி ஜெகசொரூபி தர்மலிங்கம் |
| யா/வெ/314 | வல்லி கனகன் |
| யா/வெ/321 | திருமதி இராஜேஸ்வரி நவரட்ணம் |
| யா/வெ/322 | திருமதி திரேசா இம்மானுவேல் |
| யா/வெ/329 | திருமதி சீதா விஜயராஜா |
| யா/வெ/331 | சின்னத்துரை ஜெயமனோகரன் |
| யா/வெ/332 | திருமதி பராசக்தி செல்வநாயகம் |
| யா/வெ/335 | கனகராசா சீனிவாசகம் |
| யா/வெ/336 | திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் |
| யா/வெ/345 | சின்னராமன் செட்டியார் சுப்பிரமணியம் |
| யா/வெ/347 | திருமதி இராசம்மா கணேசன் |
| யா/வெ/348 | திருமதி விநாயகபாக்கியம் சண்முகதாசன் |
| யா/வெ/354 | செல்லையா கைலைநாதன் |
| யா/வெ/355 | மேரிஇமெல்டா அந்தோனிப்பிள்ளை |
| யா/வெ/366 | திருமதி கலாநாயகி பாலகிருஸ்ணன் |
| யா/வெ/370 | மார்க்கண்டு ரவிசங்கர் |
| யா/வெ/371 | குமாரகுருசிங்கம் நிதர்சன் |
| யா/வெ/377 | சிவக்கொழுந்து நடராசா |
| யா/வெ/378 | தேவஅருள்ராஜா றோயிஸ் மைக்மிலன் |
| யா/வெ/383 | நாராயணசாமி சந்திரசேகரன் |
| யா/வெ/387 | கந்தையா நடராஜா |
| யா/வெ/390 | வசந்தகுமாரி ஏகாம்பரம் |
| யா/வெ/392 | தம்பிப்பிள்ளை ஞானசேந்தன் |
| யா/வெ/393 | விநாசித்தம்பி ஜெயராசா |
| யா/வெ/394 | திருமதி முத்துமாரி துரைராசா |
| யா/வெ/396 | சதாசிவம் அற்புததேவராஜா |
| யா/வெ/403 | முத்துக்குமாரு விநாயகசேகரம் |
| யா/வெ/411 | சுப்பிரமணியம் நித்தியானந்தன் |
| யா/வெ/414 | நடராசா பாலேந்திரா |
| யா/வெ/419 | திருமதி இந்திராணி சுந்தரலிங்கம் |
| யா/வெ/420 | திருமதி பவளம் மனோகரன் |
| யா/வெ/422 | செல்லத்துரை தாமோதரநாதன் |
| யா/வெ/425 | பாக்கியநாதர் கிறிஸ்ரியோசப் |
| யா/வெ/430 | கிருபா டேவிட் நடராசா |
| யா/வெ/436 | திருமதி ராகினி துரையப்பா |
| யா/வெ/438 | திருமதி மரியறோஸ் மரியதாஸ் |
| யா/வெ/441 | திருமதி சிவனேஸ்வரி மரியாபரணம் |
| யா/வெ/442 | மரியாம்பிள்ளை அன்ரன் அருளேஸ்வரன் |
| யா/வெ/447 | சிவரா்சா சித்திராங்கதன் |
| யா/வெ/454 | தர்சினி சிவலோகசுந்தரம் |
| யா/வெ/459 | திருமதி நகுலாம்பிகை செல்வக்குமாரன் |
| யா/வெ/460 | விஜியதர்மா குமரேஸவர்தாஸ் |
| யா/வெ/463 | திருமதி தையல்நாயகி இராமநாதன் |
| யா/வெ/466 | சின்னத்துரை கோகுலதாசன் |
| யா/வெ/467 | இரத்தினம் கணேசலிங்கம் |
| யா/வெ/470 | நிலாநிதி சிவகடாட்சம் |
| யா/வெ/471 | சுப்பிரமணியம் சந்திரன் |
| யா/வெ/472 | திருமதி தங்கம்மா சிவலிங்கம் |
| யா/வெ/473 | சுப்பிரமணியம் சண்முகநாதன் |
| யா/வெ/476 | திருமதி மொறின் வரதன் |
| யா/வெ/477 | திருமதி சற்குணலீலா கிரிதரன் |
| யா/வெ/480 | மாணிக்கவாசகம் தங்கவேலு |
| யா/வெ/483 | திருமதி ருக்குமணி உதயகுமார் |
| யா/வெ/484 | பசுபதிப்பிள்ளை அரசரத்தினம் |
| யா/வெ/488 | நமசிவாயம் வாசஸ்பதி |
| யா/வெ/489 | தங்கவடிவேல் மகேந்திரன் |
| யா/வெ/490 | சண்முகம் பத்மநாதன் |
| யா/வெ/493 | முருகேசு தவராசா |
| யா/வெ/499 | திருமதி இராஜேஸ்வரி ஆசீர்வாதம் |
| யா/வெ/501 | குமாரசாமி சிவசுப்பிரமணியம் |
| யா/வெ/502 | சண்முகநாதன் யோகநாதன் |
| யா/வெ/504 | விசுவலிங்கம் சிவச்செல்வன் |
| யா/வெ/507 | திருமதி திவ்வியசிரோன்மணி நாகராஜா |
| யா/வெ/508 | செய்யது முகமட்அலி |
| யா/வெ/510 | தோமஸ் சிறிநாதன் |
| யா/வெ/515 | இரத்தினஜோதி பரஞ்சோதி |
| யா/வெ/516 | தம்பிமுத்து விநாயகமூர்த்தி |
| யா/வெ/518 | திருமதி இராஜேஸ்வரி அரியரட்ணம் |
| யா/வெ/522 | திருமதி யசோதா ஜெயநாதன் |
| யா/வெ/523 | திருமதி சுகிர்தா துரைசாமி |
| யா/வெ/524 | பாலசிங்கம் சர்வகுணானந்தன் |
| யா/வெ/526 | ஆறுமுகம் சிவபாலசுந்தரம் |
| யா/வெ/527 | திருமதி சிவஞானவல்லி நவரத்தினம் |
| யா/வெ/529 | இராஜசூரியர் ஈஸ்வரகுமாரன் |
| யா/வெ/531 | திருமதி அம்றோசியா சுசீலா இயூஜின் மரியாம்பிள்ளை |
| யா/வெ/532 | சீவரட்ணம் பவானந்தன் |
| யா/வெ/538 | வேலாயுதம் வயித்திலிங்கம் |
| யா/வெ/540 | சங்கரையா நாராயணசாமி |
| யா/வெ/541 | மரியாம்பிள்ளை பிரான்சிஸ் கிறிஸ்பின் |
| யா/வெ/542 | ஆறுமுகம் கதிர்காமநாதன் |
| யா/வெ/543 | திருமதி லலிதா தர்மகுலசிங்கம் |
| யா/வெ/544 | திருமதி சிவபாக்கியம் ஸ்ரீபாலமோகன |
| யா/வெ/546 | திருமதி மோகனா செல்வராஜா |
| யா/வெ/548 | திருமதி கௌரி சிறிரஞ்சன் |
| யா/வெ/549 | திருமதி ஊர்மிளா அன்ரனற் செல்வநாயகம் |
| யா/வெ/553 | திருமதி சாந்தினி ஞானரட்னம் |
| யா/வெ/555 | சுந்தரமூர்த்தி இராசகுமார் |
| யா/வெ/556 | மயில்வாகனம் சிவராசா |
| யா/வெ/557 | திருமதி மாலினிதேவி ஜோதிவர்மன |
| யா/வெ/561 | நடராசா ஞானலிங்கம் |
| யா/வெ/562 | பாலசுப்பிரமணியம் தர்மரத்தினம் |
| யா/வெ/570 | திருமதி வாசுகி சிறிஸ்கந்தரூபன் |
| யா/வெ/572 | கணபதிப்பிள்ளை அப்பாத்துரை |
| யா/வெ/574 | பிறேமலோஜினி சண்முகரட்ணம் |
| யா/வெ/577 | சற்குணராசா ராஜ்குமார் |
| யா/வெ/582 | பிறேமறோகினி ஈடித்லூயிஸ் |
| யா/வெ/596 | அருணாசலம் கதிர்காமநாதன் |
| யா/வெ/598 | இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை |
| யா/வெ/601 | திருமதி குமுதினி சிவதாஸ் |
| யா/வெ/603 | திருமதி கௌரியம்பாள் ஆனந்தராசா |
| யா/வெ/604 | இளையதம்பி தில்லைநாயகம் |
| யா/வெ/605 | திருமதி சிவகௌரிதேவி தர்மலிங்கம் |
| யா/வெ/607 | திருமதி முத்துராணிஜெகராசசிங்கம் |
| யா/வெ/611 | டானியல் புரட்சிதாசன் |
| யா/வெ/614 | திருமதி இராஜேஸ்வரி வேலும்மயிலும் |
| யா/வெ/617 | நாகலிங்கம் கந்தசாமி |
| யா/வெ/626 | விநாசித்தம்பி கணேசமூர்த்தி |
| யா/வெ/628 | திருமதி பீஸ்ஜோய் ஞான்துரை |
| யா/வெ/629 | திருமதி இராணி செல்வரத்தினம் |
| யா/வெ/631 | ரூபா மகாதேவா |
| யா/வெ/633 | திருமதி மகேஸ்வரி இராசதுரை |
| யா/வெ/634 | திருமதி சத்தியதேவி பாலகுருநாதன் |
| யா/வெ/638 | முத்துக்குமாரசாமி கைலாசநாதன் |
| யா/வெ/639 | கணபதிப்பிள்ளை சோதிநாதன் |
| யா/வெ/640 | வயிலற் ஜோன் |
| யா/வெ/643 | நாகலிங்கம் ஜீவரட்ணம் |
| யா/வெ/645 | சின்னத்துரை ஜெகநாதன் |
| யா/வெ/648 | சத்தியபாமா வேலாயுதபிள்ளை |
| யா/வெ/650 | திருமதி அன்னலட்சுமி குணசிங்கம் |
| யா/வெ/651 | திருமதி புனிதகுணமலர் தில்லைநடேசன் |
| யா/வெ/652 | திருமதி யோகராணி கைலேஸ்வரன் |
| யா/வெ/659 | செல்லத்துரை பொன்னுத்துரை |
| யா/வெ/670 | மனுவேல் அல்பேட் இரத்தினசிங்கம் |
| யா/வெ/672 | கிருஷ்ணர் காங்கேசன் |
| யா/வெ/679 | திருமதி ஞானாம்பிகை மகேந்திரஜோதி |
| யா/வெ/680 | சாந்திக்குமார் அரியரட்ணம் |
| யா/வெ/685 | கதிரவேலு சிவபாலன் |
| யா/வெ/686 | புஸ்பலதா தங்கராசா |
| யா/வெ/699 | மாலினி சிறினிவாசன் |
| யா/வெ/701 | இராசதுரை செல்வநாயகம் |
| யா/வெ/702 | கணபதியார் நாகமுத்து |
| யா/வெ/705 | கணபதிப்பிள்ளை இரத்தினவேல் |
| யா/வெ/707 | இளையதம்பி நடராசா |
| யா/வெ/708 | திருமதி சாந்தினிதேவி பரமேஸ்வரன் |
| யா/வெ/718 | அனிற்றா சுபோதினி சந்தியாபிள்ளை |
| யா/வெ/719 | கனகரத்தினம் இரத்தினசிங்கம் |
| யா/வெ/720 | வைரமுத்து சிவசம்பு |
| யா/வெ/721 | கந்தையா கருணாகரன் |
| யா/வெ/725 | திருமதி சந்திரா யோககோபாலகிருஸ்ணன் |
| யா/வெ/726 | சாந்தி பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/727 | சிவகலாபாமினி வைத்திலிங்கம் |
| யா/வெ/732 | திருமதி புஸ்பமலர் இராஜசேகரம் |
| யா/வெ/733 | திருமதி சுமதி சிவர்க்கலோகேந்திரன் |
| யா/வெ/734 | பிரான்சிஸ் மக்ஸமியன் |
| யா/வெ/736 | பிரான்சிஸ் மக்ஸமியன் |
| யா/வெ/740 | திருமதி ஜெயந்தா தவீந்திரன் |
| யா/வெ/741 | திருமதி அனுஷா யோகானந்தன் |
| யா/வெ/744 | இராஜரட்ணம் பத்மநாதன் |
| யா/வெ/745 | யசிந்தா சசிகலா தேவசகாயம் |
| யா/வெ/748 | திருமதி ஜெயதேவி மகாதேவன் |
| யா/வெ/750 | திருமதி நகேஸ்வரி இராசரத்தினம் |
| யா/வெ/756 | சபாநாதன் நைல்ஸ்றுபநாதன் |
| யா/வெ/758 | பொன்னையா இராமநாதன் |
| யா/வெ/763 | நாகநாதி பேரம்பலம் |
| யா/வெ/767 | விசுவலிங்கம் நடராஜா |
| யா/வெ/773 | நிரஞ்சினி பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/774 | நாகர் தம்பித்துரை |
| யா/வெ/776 | குலெந்திரன் வயிரவிப்பிள்ளை |
| யா/வெ/777 | திருமதி கொலட் சுவாம்பிள்ளை |
| யா/வெ/779 | ஜெயராஜா புனிதராஜா |
| யா/வெ/789 | திருமதி கிறேஸ் விமலராணி லோறன்ஸ் |
| யா/வெ/790 | சிவசம்பு நவரத்தினம் |
| யா/வெ/791 | சோமசுந்தரம் நடேசரத்தினம் |
| யா/வெ/792 | திருமதி இரத்னா செபஸ்ரீனா பகீரதன் |
| யா/வெ/794 | திருமதி சத்தியவதி கருணாமூர்த்தி |
| யா/வெ/795 | திருமதி விஜயராணி விஜயரஞ்சன் |
| யா/வெ/796 | மாணிக்கம் இராசு |
| யா/வெ/799 | திருமதி சுதந்திரதேவி சண்முகநாதன் |
| யா/வெ/802 | திருமதி கமலேஸ்வரி தவராசா |
| யா/வெ/803 | இராசரத்தினம் சுப்பிரமணியம் |
| யா/வெ/805 | திருமதி தாயநிதி திருநாவுக்கரசு |
| யா/வெ/807 | திருமதி மகாலட்சுமி இரத்தினம் |
| யா/வெ/809 | திருமதி சுகிர்தலோசனா துரைராசா |
| யா/வெ/810 | திருமதி பரமேஸ்வரி இராசையா |
| யா/வெ/812 | பொன்னுத்துரை சண்முகராசா |
| யா/வெ/820 | திருமதி பராசக்தி தவலிங்கம் |
| யா/வெ/822 | ஞானப்பிரகாசம் குலசேகரம் |
| யா/வெ/825 | திருமதி ஜெயமணிதேவி திருச்செல்வம் |
| யா/வெ/826 | சின்னப்பு அப்புத்துரை |
| யா/வெ/830 | சத்தியபாமா சடாட்சரநாதன் |
| யா/வெ/833 | திருமதி நவமணி செல்வரத்தினம் |
| யா/வெ/834 | திருமதி சரஸ்வதி கனகரத்தினம் |
| யா/வெ/837 | செல்லையா பரம்சோதி |
| யா/வெ/839 | கதிரவேலு சண்முகலிங்கம் |
| யா/வெ/840 | தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி |
| யா/வெ/842 | திருமதி சுந்தரேசுவரி மனோகரன் |
| யா/வெ/844 | திருமதி நிர்மலாதேவி ஜெயராஜா |
| யா/வெ/846 | திருமதி அருள்சோதி சோமசுந்தரம் |
| யா/வெ/847 | வைரமுத்து பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/852 | தில்லையம்பலம் ஜெகதீஸ்ன் |
| யா/வெ/853 | திருமதி வசந்தி ஞானதாஸ் |
| யா/வெ/856 | செல்லையா இராசலிங்கம் |
| யா/வெ/857 | கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம் |
| யா/வெ/859 | பொன்னுச்சாமி செகராஜசேகரம் |
| யா/வெ/860 | திருமதி கனகாம்பிகை கந்தசாமி |
| யா/வெ/862 | திருமதி ராகினி சண்முகநாதன் |
| யா/வெ/863 | திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம் |
| யா/வெ/864 | திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் |
| யா/வெ/869 | பொன்னுத்துரை யோகானந்தராசா |
| யா/வெ/870 | பொன்னுத்துரை குகானந்தராசா |
| யா/வெ/874 | திருமதி இராஜேஸ்வரி தம்பையா |
| யா/வெ/875 | பழனிவேல் லோகநாதன் |
| யா/வெ/876 | அன்ரன்எகஸ்பெரிற்றஸ் சுவாஜி இராசேந்திரா |
| யா/வெ/881 | திருமதி மேரிபுளோரன்ஸ் யோசவ் |
| யா/வெ/884 | திருமதி மஞ்சுளா தில்லைச்சந்திரன் |
| யா/வெ/885 | ஜேம்ஸ் தம்பிராஜா சற்குணரஞ்சன் |
| யா/வெ/889 | நாகமணி சிவசுப்பிரமணியம் |
| யா/வெ/892 | இளையதம்பி தம்பு |
| யா/வெ/895 | சுப்பிரமணியம் சுபதாசன் |
| யா/வெ/898 | திருமதி மொனிக்கா மாலதி விஸ்வலிங்கம் |
| யா/வெ/900 | திருமதி புஸ்பராணி இலங்கைநாதன் |
| யா/வெ/901 | திருமதி சகிலா தர்மகுலன் |
| யா/வெ/903 | திருமதி கணேசராணி பிரேம்குமார் |
| யா/வெ/904 | திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம் |
| யா/வெ/905 | சாந்தினி தங்கவேல் |
| யா/வெ/906 | சோமசுந்தரம் கெங்காதரன் |
| யா/வெ/907 | இராஜதுரை இராசநாயகம் |
| யா/வெ/908 | திருமதி றோஸ்மணி சுப்பிரமணியம் |
| யா/வெ/910 | திருமதி சாந்தி பாலச்சந்திரன் |
| யா/வெ/912 | திருமதி திருச்செல்வராணி இராஜேந்திரன் |
| யா/வெ/913 | திருமதி சுமதி சபேசன் |
| யா/வெ/914 | திருமதி உஷா ஜெயக்குமாரன் |
| யா/வெ/917 | வேலுப்பிள்ளை குலசிங்கம் |
| யா/வெ/920 | தம்பு சிவராஜலிங்கம் |
| யா/வெ/921 | திருமதி நிர்மலா அன்னலிங்கம் |
| யா/வெ/922 | செல்லையா செல்வநாயகம் |
| யா/வெ/929 | திருமதி மனோரஞ்சினி சண்முகபாலன் |
| யா/வெ/935 | மாணிக்கவாசகம்பிள்ளை பாலச்சந்திரன் |
| யா/வெ/936 | மார்க்கண்டு குகதாஸ் |
| யா/வெ/937 | திருமதி செல்லம்மா சின்னத்துரை |
| யா/வெ/940 | திருமதி மேரிஅன்ரோனியாடிலமினா வின்சஸ்லோஸ் |
| யா/வெ/941 | முத்துச்சாமி சிறீதரன் |
| யா/வெ/942 | திருமதி ஜீவமணி பாலகுருநாதன் |
| யா/வெ/944 | காசிப்பிள்ளை நடேசன் |
| யா/வெ/951 | திருமதி பாக்கியேஸ்வரி சண்முகநாதன் |
| யா/வெ/953 | திருமதி கணேசம்மா மயில்வாகனம் |
| யா/வெ/954 | சிவப்பிரகாசம் பிறேமாகரன் |
| யா/வெ/960 | தர்மலிங்கம் கிருஸ்ணசாமி |
| யா/வெ/963 | திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தமூர்த்தி |
| யா/வெ/965 | நாகலிங்கம் இராசரத்தினம் |
| யா/வெ/967 | பாலேந்திரா சேரன் |
| யா/வெ/968 | சிதம்பரநாதன் சிறிகரன் |
| யா/வெ/969 | செல்லையா இராசரத்தினம் |
| யா/வெ/970 | முருகேசு வேலாயுதம் |
| யா/வெ/972 | திருமதி சுபத்திராதேவி வாமதேவன் |
| யா/வெ/974 | சின்னத்துரை சிறிசேனா |
| யா/வெ/976 | சுஜனி கந்தையா |
| யா/வெ/978 | ராகினி தியாகராசா |
| யா/வெ/981 | திருமதி மாலினி சோமஸ்கந்தன் |
| யா/வெ/983 | கவுன்ரஸ் கனகசுந்தரம் |
| யா/வெ/986 | திருமதி அன்னசிரோன்மணி இராசரத்தினம் |
| யா/வெ/987 | திருமதி அரியதேவி லூதர் |
| யா/வெ/989 | திருமதி செல்வானந்தி விஜயசிறி |
| யா/வெ/994 | கனகசபை தெய்வேந்திரராசா |
| யா/வெ/999 | திருமதி வத்சலா யோர்ச் ஸ்டான்லி |
| யா/வெ/1003 | திருமதி றஞ்சிதம் விக்னேந்திரன் |
| யா/வெ/1005 | சரவணமுத்து சிறிகந்தராசா |
| யா/வெ/1008 | சுந்தரலிங்கம் சுதர்சன் |
| யா/வெ/1011 | திருமதி பத்மாவதி வாசுதேவன் |
| யா/வெ/1012 | திருமதி கமலாதேவி சண்முகராசா |
| யா/வெ/1015 | மார்க்கண்டு குணாளன் |
| யா/வெ/1017 | திருமதி ராஜராஜேஸ்வரி வேலுப்பிள்ளை |
| யா/வெ/1018 | திருமதி திகள்மதி செல்வேந்திரன் |
| யா/வெ/1021 | திருமதி கமலாதேவி ஜெயச்சந்திரன் |
| யா/வெ/1022 | செல்லையா சண்முகராசா |
| யா/வெ/1023 | தவரஞ்சினி சிவசுப்பிரமணியம் |
| யா/வெ/1024 | பொன்னையா கோவிந்தசாமி |
| யா/வெ/1025 | பொன்னுச்சாமி யோசப் தேவானந்தன் |
| யா/வெ/1028 | செல்லையா ஐயாத்துரை |
| யா/வெ/1030 | கந்தையா இரத்தினம் |
| யா/வெ/1031 | திருமதி டெய்சி இன்பமலர் ஞானப்பிரகாசம் |
| யா/வெ/1032 | ஆறுமுகம் கந்தையா மாணிக்கம் |
| யா/வெ/1034 | ரிசிவதனி கனகரத்தினம் |
| யா/வெ/1035 | இராசரத்தினம் தேவசகாயம் |
| யா/வெ/1042 | குஞ்சிதபாதசர்மா கரிகரசர்மா |
| யா/வெ/1043 | கந்தையா விஸ்வலிங்கம் |
| யா/வெ/1050 | திருமதி தெய்வானைப்பிள்ளை கைலாசபிள்ளை |
| யா/வெ/1051 | திருமதி லிங்கேஸ்வரி குலசிங்கம் |
| யா/வெ/1054 | திருமதி பவளகாந்தி கதிர்காமநாதன் |
| யா/வெ/1058 | பொன்னையா பாலசுப்பிரமணியம் |
| யா/வெ/1059 | திருமதி மாலுதி தெய்வேந்திரன் |
| யா/வெ/1064 | திருமதி நிர்மலாதேவி சண்முகராசா |
| யா/வெ/1065 | தேவரஜனி பாலராஜா |
| யா/வெ/1070 | விஜெயநிர்மலா கார்த்திகேசு |
| யா/வெ/1072 | தங்கராசா செல்வரட்ணம் |
| யா/வெ/1073 | தர்மலிங்கம் இரட்ணசிங்கம் |
| யா/வெ/1075 | சின்னத்தம்பி தியாகராசா |
| யா/வெ/1076 | திருமதி விநோதினி பத்திநாதா |
| யா/வெ/1079 | திருமதி குணமணி நாகராசர் |
| யா/வெ/1082 | சிவசிங்கம் புஸ்பராசா |
| யா/வெ/1089 | கிரகரி செபஸ்தியாம்பிள்ளை |
| யா/வெ/1091 | திருமதி சிந்தியா இராசநாயகம் |
| யா/வெ/1094 | திருமதி சந்திரவதனா இராமநாதன் |
| யா/வெ/1095 | ஆரோக்கியம் யோசவ் யேசுதாசன் |
| யா/வெ/1098 | சுந்தரம் அருணகிரிராஜா |
| யா/வெ/1103 | திருஞானசம்பந்தர் யஸ்மின்நாயக்கபாபு |
| யா/வெ/1105 | திருமதி கிரசன்சியாபாமினி இராசையா |
| யா/வெ/1108 | திருமதி சிவபாக்கியம் சபாரத்தினம் |
| யா/வெ/1111 | திருமதி லலிதாதேவி நிற்சிங்கம் |
| யா/வெ/1112 | கந்தையா செல்லத்துரை |
| யா/வெ/1114 | திருமதி மகேஸ்வரி வீக்கினேஸ்வரன் |
| யா/வெ/1116 | திருமதி தேவசரோஜா சிறீகாந்தன் |
| யா/வெ/1117 | ஜெகசோதி பாஸ்கல் ஜெயானந்தன் |
| யா/வெ/1118 | கதிர்காமு செல்லையா |
| யா/வெ/1119 | திருமதி சுகுணவதி துரைராசா |
| யா/வெ/1121 | வன்னியசேகரம் கருணைநாதன் |
| யா/வெ/1125 | தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம் |
| யா/வெ/1126 | கதிரவேலு மோகனதாஸ் |
| யா/வெ/1128 | திருமதி அனந்தலட்சுமி அம்பாள் தங்கசாமி ஐயர் |
| யா/வெ/1129 | திருமதி நந்தினி பாஸ்கரன் |
| யா/வெ/1130 | திருமதி பவானி நடராசா |
| யா/வெ/1131 | சுப்பிரமணியம் பத்மநாதன் |
| யா/வெ/1133 | திருமதி பிறேமினி மோசஸ |
| யா/வெ/1136 | விநாசித்தம்பி பாலச்சந்திரன் |
| யா/வெ/1146 | திருமதி நாகராஜேஸ்வரி பரராசசேகரம |
| யா/வெ/1147 | திருமதி இராணி தயாளன் |
| யா/வெ/1151 | திருமதி மகாலட்சுமிஇராமநாதன் |
| யா/வெ/1152 | திருமதி இராஜேஸ்வரி நடராசா |
| யா/வெ/1155 | திருமதி பெருந்தவச்செல்வி சிறிகிருஸ்ணகுமார் |
| யா/வெ/1156 | சோமஸ்கந்தசர்மா சசீகரன் |
| யா/வெ/1158 | திருமதி செந்திலரசி சிவதாசன் |
| யா/வெ/1159 | திருமதி லீலாவதி பாலச்சந்திரன் |
| யா/வெ/1163 | திருமதி தேவகி செல்வவிநாயகப்பிரகாசம் |
| யா/வெ/1166 | தெய்வேந்திரம் ஜீவரஞ்சிதன் |
| யா/வெ/1168 | திருமதி அந்தோனிப்பிள்ளை மரியதாசன் |
| யா/வெ/1169 | திருமதி அருந்தவமலர் கனகசிங்கம் |
| யா/வெ/1172 | குமாரசாமி இரகுநாதன் |
| யா/வெ/1173 | சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் |
| யா/வெ/1176 | யசோதரா பொன்னுத்துரை |
| யா/வெ/1183 | திருமதி சின்னத்துரை சிவலிங்கம் |
| யா/வெ/1184 | திருமதி அசோகராணி நடராசா |
| யா/வெ/1185 | கணபதிப்பிள்ளை கணேசரட்ணம் |
| யா/வெ/1188 | வேலாயுதம் கருணாகரன் |
| யா/வெ/1191 | திருமதி மாருதப்புரவீகவல்லி பாலசிங்கம் |
| யா/வெ/1200 | பொன்னுத்துரை இராஜேஸ்வரன் |
| யா/வெ/1201 | செல்லத்துரை இராஜேந்திரா |
| யா/வெ/1203 | சரவணபவான் செந்தூர்ச்செல்வன் |

# முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய உயர்மட்ட அதிகாரிகள்கொண்ட குழு

## பிரதமர் பணிப்பின் பேரில் அமைக்கப்பட்டது

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் பணிப்பின்பேரில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைவரங்களை ஆராயஉயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சின் செயலாளர் எம் என். யுனைட் தலைமையிலான இக்குழுவில் பொலிஸ்மா அதிபர் ரி இ ஆனந்தராசா பிரதி பொலிஸ் மாஅதிபர் நிமால் குணதிலக,விசேடஅதிரடிப்படை அதிகாரிகள் ஆகியோரையும் அங்கத்தவர்களாக உள் துறைஅமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று நியமித்துள்ளார்.

இக்குழுவின் செயலாளராக பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திரட சில்வா பணிபுரிவார்.

இக்குழுவானது வடக்கு கிழக்குமுஸ்லிம்களின் பாதுகாப்பை ஆராய்தல்.

சட்டநடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வேண்டிய ஆலோசனைகளைவழங்குதல்.

வடக்குகிழக்கில் உள்ள ஏனை சமூகத்தவர்களுடன் அன்னியோன்னிய உறவை ஏற்படுத்துதல்;

பொலிஸ், விசேடஅதிரடிப்படை மற்றும் தமிழ்சமூகம் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்தி புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.

முன்னர் இடம் பெற்றது போன்ற துர்ப்பாக்கிய சம்பவங்கள் இனியும் இடம்பெறாதவாறு தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சிபார்சு செய்தல் ஆகியபணிகளில் ஈடுபடவுள்ளது.

இவை தொடர்பிலான அறிக்கையை ஒருமாதகாலத்தினுள் பிரதமரிடம் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் உள்துறைஅமைச்சர் பணித்துள்ளார்.

# பொதுத் தேர்தல் நடத்தினால் பொ. ஐ. மு. படுதோல்வி காணும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக உள்ளது.

இவ்வாறு சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க வரவு செலவுத்திட்டம் மீதான உரையில் நேற்றைய தினம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்:-

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடக்குமாயின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது இருப்பதைவிட கூடுதலான ஒரு பாராளுமன்ற உறுப்பினரையாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசு பெறும்.

கண்டி, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசு கூடுதலான இடங்களைப் பெறும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் சுமார் 5 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர் அத்துடன் வருடம் தோறும் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் வேலையில்லாதோர் பட்டியலில் சேர்த்துகொள்கின்றனர்.

அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

அதேவேளை;

5அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்றத்தைப் புறக்கணித்துவந்த முஸ்லிம் எம்.பிக்களை கடந்த வெள்ளியன்று பிரதமர் சந்தித்து கலந்துரையாடிய வேளை வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையிலேயே இக்குழுஅமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ- 8)

## உயர்தர மாணவருக்கு பயிற்சிப் பட்டறை

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயிரியல் பிரிவில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கான செயல்முறைப் பயிற்சிப் பட்டறை இன்று மு. ப 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக விவசாயபீட உயிரியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் விவசாய, உயிரியல்துறை விரிவுரையாளர்களின் விரிவுரைகள் இடம்பெறவுள்ளன. (த- 5)

## பொலிசாரை அகற்றுக -செல்வம் எம். பி.

மன்னார் பிரதான வீதியில் இருந்து குஞ்சுக்குளம் மாதா கிராமத்துக்குச் செல்லும் பாதையில் முகாமிட்டுள்ள பொலிஸாரை அங்கிருந்து வெளியேறுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உள்துறைஅமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ- 8)

## கரை ஒதுங்கிய மீன்பிடிப் படகு

காரைநகர் கல்லந்தாழ்வுக் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்று நேற்று முன்தினம் இரவு கரை ஒதுங்கியது. கரை ஒதுங்கிய படகில் பெருமளவு மீன்பிடி வலைகள் காணப்படுவதாகவும், அப்படகு கோவிந்தராஜ் சிறிமாரி அம்மன் என பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த- 75)

## மாகாணமட்ட விளையாட்டு போட்டியில் 130 யாழ். வீரர்கள் பங்கேற்பர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரைகளுத்துறை பொது நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ள மாகாணமட்ட சமாதான விளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து 130வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

மேற்படி வீரர்களுக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிட ஒழுங்குகளை காணி அமைச்சு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் தலைமையில் இங்கிருந்து புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 16)

## ஒஸ்லோ மாநாட்டு விடயங்கள் குறித்து பொருளாதாரக் குழு திங்களன்று கிளிநொச்சியில் கூடி ஆராயும்

(கொழும்பு)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இம்மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்து ஆராயும் மாநாட்டிற்கு முன்னர் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயும் வகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி பொருளாதாரக் குழு கிளிநொச்சியில் கூடவுள்ளது;

இக் கூட்டத்துல் இடம்பெறவுள்ள அரச பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ளன.

இக் கூட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியைப் பெறுவதற்கான திட்டம் குறித்து தீர்மானிக்கப்படும் என சமாதான செயலக பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை நடைபெறவுள்ள ஒஸ்லோ மாநாட்டில் கனடாவின் சார்பில் அதன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான அமைச்சர் சூசன் வீலரும் பிரதி வெளிவிவகார அமைச்சர் டேவிற்கில்சரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒஸ்லோ மாநாட்டில் 775 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை திரட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-3

## அமைச்சர்கள் நியமன இழுபறி ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்கிறது ஐ. தே. மு

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்து பெறாத 7அமைச்சர்களையும் ஒருபிரதி அமைச்சரையும் நியமிப்பதற்கு மறுப்புத் தெரிவிப்பதற்கான காரணங்களை ஐக்கியதேசியமுன்னணி அரசு கோரியுள்ளது.

இவ் அமைச்சரவையை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதியின் அனுமதி பெற்று பெயர் பட்டியல்ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் அப்பெயர் பட்டியலை ஏற்கமறுத்து மீண்டும் பிரதமருக்கே ஜனாதிபதி திருப்பி அனுப்பியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள அமைச்சர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்கனவே கருத்துமுரண்பாடுகள் இருந்தமையேஇதற்கான காரணம் என அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

(உ-8)

## இன, மத, மொழி, பேதம் கடந்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம்

### ஜனாதிபதி சந்திரிகா அறைகூவல்

(கொழும்பு)

நாட்டின் வருங்கால சந்ததியினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, எம்மிடையே உள்ள குரோதங்களையும், அரசியல் கட்சி இன, மத, வேறுபாடுகளையும் களைந்து செயற்படுவோம்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

பேருவளை தொகுதியில் உள்ள கந்தேவிகாரையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டின் தலைவி என்றரீதியில் நாட்டை கட்டியெழுப்பும் பணிக்கு தியாகத்துடன் பாடுபடுவேன்.

கடந்த இருதசாப்தங்களாக நடந்த தொடர் யுத்தத்தினால் நாடு 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களை இழந்து விட்டது.

அதேஅளவிலான இளைஞர் யுவதிகளையும் தமிழ்ச் சமூகம் இழந்துள்ளது. இது இவ்விரு இனத்தவர்களுக்கும் வேதனைக்குரிய விடயமாகும்.

2ஆயிரத்து 500வருடகால சரித்திரத்தில் பௌத்த நாடொன்றில் இப்படியான மனித அழிவு இடம்பெற்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

மதங்கள் எமக்கு நல்ல வழியை காட்டுகின்றன. பௌத்தமதம் மட்டுமல்லாது இந்து, இஸ்லாம், சிறிஸ்தவம் ஆகிய மதங்களும் கூட நல்ல வழியையே காட்டி நிற்கின்றன எனவும் தெரிவித்துள்ளார். (உ- 8)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் 500 தமிழ் அரசியல் கைதிகள் சட்டமா அதிபரினால் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத மற்றும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் இதுவரை 500க்கும் மேற்பட்ட தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினால் வருடஆரம்பத்தில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குசட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னரே இவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டநடவடிக்கை எடுப்பதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தாலேயே இவர்கள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் யாவும்

இதேவேளை மேலும்225 தமிழ் அரசியல் கைதிகள் நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## படகினுள் நீர் புகுந்ததும் பயணிகள் களேபரம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவிலிருந்து ஊர்காவற்றுறை இறங்குதுறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகினுள் நேற்று பெருமளவு நீர் புகுந்ததில் பயணிகள் களேபரமடைந்தனர்.

அதிகளவு பயணிகளையும், பொருட்களையும் ஏற்றிக்கொண்டு சென்ற படகு ஒரு பக்கம் சரிந்தமையினாலேயே படகினுள் நீர் புகுந்துள்ளது

பயணிகளின் பெரு முயற்சியினால் படகினுள் புகுந்த கடல்நீர் துரிதமாக வெளியேற்றப்பட்டு படகு ஊர்காவற்றுறையை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (த- 75)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அருங்காலை எள்ளினும் உள்ளம் சுடும்.
குறள்

## வலம்புரி

### ஓட்டப்பம் வீட்டைசுடும்

தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும். பட்டினத்தடிகள் இவ்வாறு கூறிக்கொண்டு நஞ்சு கலந்த அப்பத்தை வீட்டின் மீது எறிகின்றார் வீடு பற்றி எரிகின்றது. இதே நிலைதான் இப்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு நிபந்தனை விதித்ததுடன் அரசுக்கு வழங்கிவந்த ஆதரவையும் விலக்கிக் கொண்டார் இதனால் நாடு தேர்தலைச் சந்தித்தது.

இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறது.

எனினும் அக்கட்சியின் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்ததுடன், தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வழங்கிய வாக்குறுதியை அடுத்து பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர். இருப்பினும் தாம் பாராளுமன்றத்தில் தனித்து இயங்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். இது கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

தனது கட்சி சார்ந்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்தது ஹக்கீமின் பலவீனமான தலைமைத்துவத்தைச் சுட்டிக்காட்டுவதாக இராஜதந்திரிகள் கருத்து தெரிவித்த நிலையில் அமைச்சர் ஹக்கீமின் நிலைப்பாடு மேலும் மோசமடையும் போல் தெரிகிறது. அதாவது பாராளுமன்றைப் பகிஷ்கரித்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வலைக்குள் சிக்குப்பட்டு விடுவார்களோ என்ற பயம் ஹக்கீமுக்கு நிச்சயம் தலையிடியைக் கொடுக்கப் போகிறது.

ஒன்பது பேரும் ஜனாதிபதியிடம் சிக்கிவிட்டால் அவர்களைச் சிக்கனப் பிடித்துக் கொள்வதில் ஜனாதிபதி மிகக் கவனமாகச் செயற்படுவார் என்பதும் அதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை அதாவுல்லாவுக்கென்பதும் ஓட்டப்பம் ஹக்கீமைச்சுடுமென்பதும் உறுதியாகிவிடும்.

# ஜீரண அமைப்பில் ஏற்படும் கோளாறுகளால் இருதயத்தின் இயக்கமும் பாதிப்படைகின்றது

## மருத்துவ விளக்கம்

### எஸ். சங்கரன்

உடலில் மிகவும் முக்கியமான உறுப்பு இருதயமாகும். அண்மைக் காலமாக இருதய நோய்கள் தான் அதிக இறப்புகளுக்குக் காரணமாக இருந்து வருகிறது. எனவே, இருதயத்தைப் பற்றியும் அதற்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அனைவரும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

அற்புத ஆற்றலுடனும் அசாதாரண பலத்துடனும் அமைந்துள்ள இந்த உறுப்பைக் கவனிக்காமல் விட்டு விடுவதாலேயே அதற்கு ஊறு விளைவிக்கிறோம். பிறந்தது முதல் இறப்பது வரை தன் போக்கில் துடித்துக் கொண்டிருக்கும் அதனை ஓர் இயல்பான நிகழ்ச்சியாக எடுத்துக் கொண்டு விடுவதே நமது அலட்சியத்துக்கு காரணமாகும்.

### உறுதியான அமைப்புக் கொண்டது இருதயம்

பலரும் கருதிக் கொண்டிருப்பது போல இருதயம் ஒரு மென்மையான உறுப்பல்ல. முழுவதும் தசைகளிலேயே ஆனபோதிலும் உறுதியான அமைப்புக் கொண்டது. அதே சமயம் பயிற்சியினால் அதன் இயக்கத்தை ஒழுங்கு படுத்தவும் முடியும். இருதயத்தின் அமைப்பையும் அது இயங்கும் விதத்தையும் சுருக்கமாகத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

இரத்தம் நமது உடல் முழுவதும் சுற்றி வருகிறது அப்போது ஒவ்வொரு செல்லுக்கும் வேண்டிய பிராணவாயுவையும் ஊட்டச் சத்துக்களையும் வழங்கி விட்டு அங்கு சேர்ந்துள்ள கழிவுகளை எடுத்துக்கொண்டு திரும்புகிறது. பாயும் நிலையிலுள்ள இரத்தம் உடல் முழுவதும் சென்று வருவதற்கு ஒரு 'பம்ப்' வேண்டும். நமது இருதயம் இந்தபம்ப் ஆகத்தான் செயல் படுகிறது.

### இரத்தத்தின் செயற்பாடு

பிராணவாயுவைத் தாங்கிச் செல்லும் இரத்தம் நாடிகள் வழியாகப் பாய்கிறது. கழிவுகளை எடுத்து வரும் இரத்தம் நரம்புகள் வழியாகச் செல்கிறது. அசுத்த இரத்தத்திலுள்ள கழிவுப் பொருட்கள் நுரையீரலில் வெளியேற்றப் பட்டு, மீண்டும் சுத்த இரத்தம் ஆகிறது. பிராண வாயுவை எடுத்துக் கொண்டு இருதயத்தை அடைகிறது.

இரத்தத்தின் மூலம் உறுப்புகளுக்கு வேண்டிய பல்வேறு ஊட்டச் சத்துகளை கல்லீரல் சிறுநீரகம், மண்ணீரல் போன்றவை வழங்குவதுடன் கழிவை வெளியேற்றவும் விஷப் பொருள்களை முறிக்கவும் உதவுகின்றன.

இருதயம் இரண்டு பம்புகள் சேர்ந்தமைந்த ஒன்று திறமையாகச் செயல்படும் இது சிக்கலான அமைப்புக் கொண்டதும் கூட. ஒருவருடைய கைமுஷ்டியளவேயுள்ள இது தன் இயக்கத்துக்கு வேண்டிய ஆற்றலை வெளியிலிருந்து பெறுவதில்லை தன்னிடமிருந்தே பெறுகிறது. இரத்தத்தை நாடி வழியாகச் செலுத்துவதற்காக சுருங்கி விரிவதைத் தான் நாடித் துடிப்பு என்கிறோம்.

### எல்லாச் சத்துக்களும் அவசியம்

இருதயம் நல்ல நிலையில் இருப்பதும் இயங்குவதும் உடலின் பொதுவான ஆரோக்கியத்தையும் பொறுத்ததாகும் உடலின் எல்லா உறுப்புகளுக்குமே ஊட்டச் சத்துக்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு உறுப்புக்கும் இது தான் தேவை என்று வரையறுத்துக் கூற முடியாது எல்லா சத்துக்களுமே உடலுக்கு கிடைத்துவந்தால் அதற்கு வேண்டியதை ஒவ்வொருஉறுப்பும் ஏற்றுப் பயனடையும்.

உடலில் ஓர் உறுப்பில் ஏற்படும் பாதிப்பு இன்னொன்றையும் பாதிக்கவே செய்கிறது. ஜீரண அமைப்பில் ஏற்படும் கோளாறுகள் இருதயத்தின் இயல்பான இயக்கத்தைப் பாதிக்கும். உடலில் அதிக அளவில் சேரும் விஷப் பொருள்களை முறிப்பதற்கு கல்லீரல் அதிக அளவில் பாடுபட வேண்டியிருக்கும் போது இருதயத்துக்கும் பாதிப்பு ஏற்படவே செய்யும்.

### உடற் பயிற்சி

உடல் பெருப்பதும் இருதயத்துக்கும் இரத்த நாளங்களுக்கும் அதிக சுமையை ஏற்படுத்தும். திசுக்களில் அதிகமாகச் சேரும் கொழுப்பு இருதயத்தசைகளைப் பாதிக்கும். கொழுப்புப் பொருள்களை அளவுக்கதிகமாக உண்பது தான் உடல் பெருப்பதற்கும் ஊளைச் சதை போடுவதற்கும் காரணமாகும். உடற் பயிற்சியின்மையும் கொழுப்பு செலவழிக்கப்படாமல் உடலில் சேர்ந்துவிடச் செய்கிறது. இரத்த ஓட்டம் சீராக நடைபெற உடற்பயிற் உதவுகிறது. இரத்த ஓட்டம் தடையின்றி நிகழும் போது இருதயத்தின் வேலைப் பளுவும் குறைகிறது.

உடலுழைப்பில் ஈடுபட்டவர்களுக்கு தனியாக உடற் பயிற்சி என்று எதுவும் தேவையில்லை. ஆனால் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகப் பல புதிய சாதனங்களும், கருவிகளும் கண்டறியப்பட்டு உடலுழைப்பை மிகப்பெருமளவுக்குத் தேவையில்லாமல் செய்துவிட்டது இருதயமும் இரத்த நாளங்களும் தசைத் திசுக்களால் ஆனவை. உடற் பயிற்சி மூலம் பெறும் தசை இயக்கத்தினால் அவை பலம் பெறுகின்றன. உயிர் என்பதே இயக்கம் தான். எந்த ஒரு உடற் பகுதியையும் இயக்கத்துக்குட்படுத்தாமல் வைத்திருந்தால் அதன் உயிர்த் தன்மை போய்விடும்.

### நிமிர்ந்த நிலை முக்கியம்

இரத்த ஓட்டம் சீராக நடைபெறுவதற்கு உடல் நிமிர்ந்த நிலையில் இருப்பதும் உதவுகிறது. மனிதரிடம் மட்டுமே உள்ள தனிப்பண்பு இது. ஈர்ப்பாற்றலைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இது எவ்வளவு முக்கியமானது என்பதை உணர முடியும், உடல் நிமிர்ந்த நிலையிலிருப்பதால் தடைப்படாமலும், தேங்காமலும் இரத்தம் உடல் முழுவதும் சென்றுவர முடிகிறது. உடல் வளைந்து இருந்தால், உடலின் பல உறுப்புகளும் அழுந்தப்பெற்று அவை நன்கு இயங்க முடியாமல் போகும். இதனாலும் இருதய இயக்கம் பாதிக்கப்படும்.

### கேடு விளைவிப்பவை

மார்பு முழு அளவுக்கு விரியவும் டயாஃபரம் தடையின்றி இயங்கவும் முடியாமல் செய்யும் எதுவுமே இருதயத்துக்கும் இரத்த ஓட்டத்துக்கும் கேடுவிளைவிப்பவை. புகைப்பிடிப்பதும் இரத்த ஓட்டத்தைப் பாதிக்கும். புகைப் பிடிப்பதால் நுரையீரல் புற்று நோய் வரக்கூடும் என்று மட்டுமே பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வேறு பல நோய்களும் அதனால் உண்டாக முடியும். நிகோட்டின் விஷம் இரத்தத்தில் கலந்து விடுவதுடன் புகைப்பிடிப்பவரால் நன்கு இழுத்து மூச்சு விடவும் முடியாது. இதனால் வேண்டிய பிராண வாயுவை உடல்பெற முடியாமல் போகிறது. இரத்த வோட்டப் பாதிப்புக்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமென்பதை மறந்துவிடக் கூடாது.

இன்றைய வேக வாழ்க்கையின் அம்சமாகிவிட்ட மன இறுக்கமும் இருதய பாதிப்புக்கு காரணமாகிறது. நாகரிக வாழ்க்கை நம்மீது சுமத்தியுள்ள சுமை இது. உடலின் எந்த ஒரு உறுப்பு பாதிக்கப் பட்டாலும் அதன் விளைவுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருதயத்தையும் தாக்குகின்றன என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஜீரண மண்டலத்துக்கு அதிகவேலை கொடுப்பது அதிகமாகவே பாதிக்கிறது என்பதால் அதன் பளுவைக் குறைப்பது அவசியமான ஒருநடவடிக்கை ஆகும்.

## தினசரி தியானம்

### குருநாதனும் இறைவனும்

ஆச்சார்யரும் இறைவனும் ஒருவரே கடவுளை உணர்ந்தவரே உண்மையான ஆச்சார்யர், உண்மையில் நீங்களும், இறைவனும், ஆச்சார்யரும் அனைவரும் ஒருவரே! மனித உருவில் குருநாதர் புற உலகுக்குத் தெரிந்தாலும், இறைவன் உங்களுக்குள் இருப்பது போலவே, குருநாதரும் உங்கள் இதயத்தில் இருக்கிறார். ஆகவே தன்னைத் தான் உணர்ந்த இறைவனை உணர்ந்த முனிவர் ஒருவரை நாடிச் சென்று, அவரைக் குருநாதராக ஏற்றுக் கொண்டீர்களானால் நீங்கள் அவரிடம் சரணடைந்து அவரில் ஒருவராகவே மாறிவிடுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# முஸ்லிம் எம். பிக்களை ஹக்கீம் இன்று சந்திப்பார்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 17 முஸ்லிம் எம். பிக்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் இன்று சந்திக்கவுள்ளார்.

முஸ்லிம்களின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விடயங்களை ஆராயும் முகமாக வடக்கு கிழக்கு முஸ்லிம் எம். பிக்கள் அடங்கிய குழு ஒன்றை அமைப்பதற்காகவே இச் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

# தமிழர்கள் துன்பப்பட இனியும் அனுமதிக்க கூடாது

## இரா, சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் இனம் கடந்த இருபது ஆண்டுகளாக அனுபவித்து வந்த துன்பதுயரங்களை இனியும் அனுபவிக்க கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

குச்சவெளி மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக குச்சவெளி விவேகானந்தவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் கருத்தறியும் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்; தற்போதைய சமாதானச் சூழலில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்தி, இவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலத்தில் மேற்கொண்ட தியாகமே சமாதான நடவடிக்கைகளுக்கு வழிவகுத்துள்ளது என்று குறிப்பிட்டார்.


இந்த நிலையில் அவர்களுக்கு பக்க பலமாக நிற்பதும் நமது கடமை எனச் சுட்டிக்காட்டினார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரானக. துரைரட்ண சிங்கம், இப்பகுதி பிர

(3-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில அமைந்துள்ள இலங்கை வங்கிக கிளையின் வெள்ளிவிழா நேற்று நடை பெற்றபோது மாவட்ட முகாமையாளர் சி.நடராஜலிங் கம், ஓய்வு பெற்ற முகாமை யாளர் மு.கனகரட்ணம், யாழ்.மேற்தர இலங்கை வங் கிக் கிளை முகாமையாளர் எஸ்.விக் கினராஜா ,உதவிப் பொது முகா மையாளர் (வடபிராந்தியம்) கா.பாலசுப் பிரமணியம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வாடிக் கையாளரில் ஒரு பகுதியினரை யும் படங்களில் காணலாம்.

படங்கள் :கை.ஜெயகாந்தன்




## ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாணவன் கொலை

# 18 பல்.கலை மாணவர் கைது

## 12 பேர் விளக்கமறியலில்!

(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழக மாணவர் ஒருவர் பகிடிவதை யினால் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து 18 பல்கலைக்கழக மாண வர்கள் கைது செய்யப்பட்டுள்ளார் கள். கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களில் 12பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களில் அனேகமானவர் கள் ஜே.வி.பி தொழிற்சங்கங்க ளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படுகிறது.

இக் கொலை தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்தவர்களு க்கு மாணவர்ச்சங்கத்தினால் எச்ச ரிக்கைகள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற் கொண்டு வரும் கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸார் மேலும் பத்து சந்தேக நபர்களைக் கைது செய் வதற்கு நடவடிக்கை எடுத்துள் ளார்கள். கைது செய்யப்பட்ட மாணவர்களில் றுகுணு பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த மாண வர்களும் அடங்குவர்.

இதேவேளை காயமடைந்த மற்றொரு மாணவனின் உடல்நிலை தற்போது தேறிவருவதாகத் தெரி விக்கப்படுகிறது. (ம)

# சிறப்புற நடைபெற்ற இலங்கை வங்கிக் கிளையின் வெள்ளிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி யில் அமைந்துள்ள இலங்கை வங் கிக் கிளையின் வெள்ளி விழா நேற்று நடைபெற்றது.

நேற்றுக் காலை 9.30மணியள வில் கிளை முகாமையாளர் எஸ். சீவரத்தினம் தலைமையில் ஆரம் மான இந் நிகழ்வில், வட பிராந் திய உதவிப் பொது முகாமையாளர் கா.பாலசுப்பிரமணியம் பிரதம விருந தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் வங்கியின் ஆரம்ப கால வாடிக்கையாளர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வங்கியில் கடமையாற்றும் ஊழி யர்கள், இலங்கை வங்கியின் மேற தரக் கிளையின் பிரதான முகாமையாளர் எஸ்.விக்கினரா ஜாவினால் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளரும், மேற்படி வங்கியின் முதலாவது முகாமையாளருமான மு.கனகரட் ணம் உரையாற்றுகையில்,

1972ம் ஆண்டு மேற்படி வங் கிக் கிளை திறக்கப்பட்டபோது பெருமளவானோரால் வங்கி திறக கப்பட்ட அன்றே கணக்குகளைத் திறந்து வங்கியின் வடிக்கையாள ராகிக் கொண்டனர். அந்தக் காலப் பகுதியில் கூட 5 கோடி ரூபா வுக்கு அதிகமான பணப் பரிமாற் றம் இடம்பெற்று வந்தது.

இன்னும் சில தினங்களில் வங்கி முழுமையாகக் கணனி மயப்படுத் தப்பட்டு வாடிக்கையாளருக்கான தனது சேவைகளை இலகுபடுத் தப்படவுள்ளமை பாராட்டுக்குரியது என்று கூறினார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட் டப் பொது முகாமையாளர் சி.நட ராஜலிங்கம் உட்பட பலஉரை நிக ழ்த்தினர். (ந-7)

### அரசு ஊழியர்களைக் குறைகக்...

அரச ஊழியர் ஒருவர் 55 வயதிற்கு முன்னதாக இளைப் பாறுவதற்கு இரண்டு வழிகளில் ஏதாவது ஒரு வழியை பின்பற்ற முடியும்.

அரச ஊழியர்களுக்கு ஒருவருடத்திற்கு ? லட்சம் ரூபாவை நட்ட ஈடாக வழங்கி அவரது வேலையை வறிதாக் குவது ஒருவழி.

மற்றையது 3 லட்சம் ரூபாவை நட்ட ஈடாக வழங்கி 55 வயதிற்குப் பின்னர் அவருக்கு ஊதியம் வழங்குவது.

இந்த இரண்டு வழிகளில் எந்த வழி உகந்ததோ அந்த வழியை ஓர் அரச ஊழியர் கடைப்பிடிக்க முடியும்.

அரசினால் தயாரிக்கப்பட்டு வரும் இந்த சுற்று நிருபம் அடுத்த வாரமளவில் சகல திணை ககளங்களிற்கும் அனுப்பி வைக் கப்படவுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டுள்ளன. (ம)

### கிளி - மன்னார்...

யிலும் கண்டனப் பேரணியின் முடிவில் மகஜர்கள் அந்தந்த அரச அதிபர்கள் மூலம் ஜனாதிபதி, பிரதமர்,பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ம)

### கிழக்கில் தமிழீழக்...

வலியுறுத்திக் கூறப்பட்டுள் ளதாக கட்சியின் ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கபபட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலி களின் தலைவர் வே.பிரபா கரனுக்கு இது தொடர்பாகக் கடிதம் ஒன்று அனுப்பப்பட் டுள்ளதாகவும்,

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் கிற்கும் இவ்விடயம் தொலை பேசியில் தெரிவிக்கப்பட்டுள் ளதாகவும் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (த)

### தாய்வான்...

ஆகிய பிரதேசங்களைச் சேர்ந் தவர்கள் சிகிச்சை பெற்றுள்ள னர்.

எதிர்வரும் 15ந் திகதி வெள்ளிக் கிழமை வரை இடம் பெறவுள்ள சிகிச்சை முகாமில் 250 பேர் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வுள்ளனர்.

அதேவேளை அடுத்தகட்டமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு ஆகிய பிரதேசங்களில் கண சிகிச்சை முகாமை விஸ்தரிக்க வுள்ளதாக அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பா ணம் வருகை தந்த இக்குழுவின ருக்கு நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பு வைபவத்தில் சுகாதார அமைச்சர் உரையாற்று கையில் இலங்கை மக்கள் கண் தானம் செய்வதில் முன்மாதிரி யாகத் திகழ்கின்றனர்.

இம் மக் களுக்கு சுகாதாரம் சம்பந்தமான உதவிகளைச் செய்வதற்கு எம் மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் கூறி னார்.

சுகாதார அமைச்சருக்கு யாழ்.மாநகர சபை முதல்வர் செ.கந்தையன் அன்பளிப்பு ஒன்றையும் வழங்கினார்.

இந் நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.இராம லிங்கம் உட்பட மாநகரசபை உறுப் பினர்கள் பலர் உரையாற்றினர்.

இதேவேளை தாய்வான் நாட்டின் தலைநகர் தாய்பே றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் ஜோசப்பின் வொங் தலை மையிலான றோட்டரியன்களும மேற்படி சுகாதாரக் குழுவில். இடம் பெற்றுள்ளனர். (த-7,9)

### ஈ.பி.டி.பி கையளித்த...

மாறு இராசாயன பகுப்பாய் வாளருக்கு கட்டளை இடப்பட் டுள்ளது.

இதேவேளை இக் கொலை வழக்கில் கைதாகிப் பிணையில் விடு விக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களும் நாட்டை விட்டு வெளியில் செல்வதற்கு அனுமதி அளிக்க வேண்டாம் என குடி வரவு குடியகல்வு அதிகாரிக ளுக்கும் உத்தரவிடப் பட்டுள்ளது.

இக் கொலை வழக்கில் ஈ.பி.டி.பி.அமைப்பைச் சேர்ந்த நான்குபேர் சந்தேகத்தின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

இவர்களில் இருவர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-16)

### முஸ்லிம் மக்களின்...

எம்.என்.யுனைட் தலைமையிலான இப் பாதுகாப்புக்குழுவில் பொலிஸ் மாஅதிபர் ரி.ஆனந்தராஜா, பரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் குணதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். பிரதிப் பொலிஸ் மாஅதிபர் இந்திர டிசில்வா குழுவின் செயலாளராகக் கடமை ஆற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது(ம.5)


நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

A/L 2004
அலைகளும் அதிர்வுகளும்
(WAVES & VIBRATIONS)
K.சிவலிங்கம்(B.Sc spl)
சனி, ஞாயிறு 5.00
(முழுப்பாடத்திட்டம் முடிக்கப்படும்)
[6179]



வேலணை பிரதேச சபையின்
கேள்வி அறிவித்தல் காலநீடிப்பு

எமது சபையினால் 01.11.2002ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்விகள் தொடர்பான காலநீடிப்பு அட்டவணை பின்வருமாறு:

கேள்விப் பத்திரங்கள் வழங்கல்
13.11.2002 - நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரங்கள் ஏற்றல்
18.11.2002 - நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறத்தல்
18.11.2002 - நண்பகல் 12.05 மணி

ந.கருணாகரகுருமூர்த்தி
(ஜே.பி.யு.எம்)
தலைவர்
வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபை.
[C/5249]



கேள்வி கூறுவிலை காலநீடிப்பு
அறிவித்தல்

31.10.2002ம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரமான நல்லூர் பிரதேச சபை கேள்வி, கூறுவிலை அறிவித்தல் கேள்விப் படிவம் வழங்கல் 15.11.2002ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப்படிவங்களை 18.11.2002ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கேள்விகள் 18.11.2002ம் திகதி பி.பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

நல்லூர் பிரதேச சபை
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி
08.11.2002

க.மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை



பதவி வெற்றிடம்
சிற்றூழியர்(ஆண்கள்)

தகுதியானவர்கள் 13.11.2002 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

இல 15,வெள்ளாந்தெரு,
(சிவன் பண்ணை வீதி)
யாழ்ப்பாணம்

நிர்வாக உத்தியோகத்தர்



யாழ் மாவட்ட மாணவர்களுக்கு

⇨ CIMA - Foundation Level & Intermediate
விரிவுரைகள் ஆரம்பம்
25-11-2002 முன் பதிவுகளை மேற்கொள்ளவும்
⇨ வங்கியியல் கற்கைநெறி
B.Sc.(Hons) Degree & ACIB
DBF, ACBF, CBF (CIB/IBSL)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
⇨ வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்
(யாழ்ப்பாணம் / பேராதனை)
GAQ, 1st in com, B.A (I), B.A (II) & B.com
விரிவுரைகள் ஆரம்பம் 16.11.2002
INQUIRIES/ REGISTRATION
DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, Hospital Road,
Jaffna
[C/5245]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.